# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௨௬ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௩, சித்திரை மே 1952 | பரல் ௯


## நெல்லைச் சித்தாந்த வகுப்பு

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தொடர்பாம் தென்னிந்திய சைவசித்தாந்தச் சங்கச் சார்பில் 27-4-1952 முதல் 20-5-1952 வரை நிகழ்த்துமா துவங்கிச் சித்தாந்த வகுப்பு நிகழ்ந்து வருகிறது.

இடம்

திருநெல்வேலிச் சந்திப்பு அருள்பெறு தருமை ஆதீனத் திருமடம். இதன்கண் இருநூறு ஆண்டுகளுக்குமுன் சிவப்பிரகாச அடிகளின் ஆசிரியர் அடிகள் வெள்ளியம்பலத் தம்பிரான் வீற்றிருந்து செந்தமிழும் செந்நெறியும் முந்துற வந்தியை மாணவர்தம் உளங்கொள உரைத்தருளி உய்வித்த ஒரு பெரும் மாண்பும் உள்ளது.

இதன்கண் அறுபது மாணவரும் மாணவியர் ஒருவரும் பயில்கின்றனர். இவருள் முப்பத்தைவர்க்கு அறுசுவைமிக்க பேருணவு இரு வேளையும், இனிய சிற்றுணவு இரு வேளையும் ஆராக் காதலன்புடன் வழங்கப் பெறுகின்றன. தக்கவாறுறைந்து உடனுறைவின் பயன்பெறுமாறு உறையுளும் உதவியும் வழங்கப் பெறுகின்றன.

இவ்வகுப்பு, நெல்லை "அருணகிரி இசைக் கழகத்தார்" ஒல்லு வகையாற்றும் சொல்லரிய நற்றுணையால் நிகழ்வதாகும். 27-4-1952 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு உடனுயிர் ஒருங்கோம்பும் தூயவேளாண் குலத்தோன்றலராம் மெய்கண்ட நாயனார் சிவஞான முனிவரனார் இவர் தம் திருவடி வழிபாட்டுடன் துவங்கப்பெற்றது.

வகுப்பு

கழக ஆட்சிப் பொறுப்பாளர் திருவாளர் வ சுப்பையா பிள்ளையவர்கள் வகுப்புத் துவங்கியுள்ளதன் பெரு நோக்கமும், ஆசிரியர், துவக்கத் தலைவர் இருவர்களின் பெரு மாண்பும் இனிமையுறச் சொல்லிவிளக்கினர்.

கழக ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வ. சு. அவர்கள் இவ் வகுப்புத் துவங்கவிழைந்து சூழ்ந்த நண்பர்கள் திருவாளர் வள்ளிநாயகம் பிள்ளை அவர்கள், சண்முகம் பிள்ளையவர்கள், சொர்ணம் பிள்ளையவர்கள், சங்கர்மில் அருணாசலம் பிள்ளையவர்கள், ஆசிரியர் தூ. சு. கந்தசாமி முதலியார் எம். ஏ. அவர்கள் ஆவர். மும்மொழிப் புலவராம் தூ. சு. க. அவர்க்ள் சித்தாந்தத்தைத் தமிழகமே யன்றி ஆங்கில வாயிலாகப் பிறபுலத்தும் பரப்பிய செல்வர். அவர்களை வகுப்புத் துவங்குமாறும் திருவாளர் வக்கீல் சிவஞானம் பிள்ளையவர்களை வகுப்பைத் திறந்து வைக்குமாறும் வேண்டிக்கொண்டார்கள்.

கழகத் தலைவர் திரு மு. காசி விசுவநாதன் செட்டியாரவர்கள் எல்லா நிகழ்ச்சிகளிலும் உடனிபைந்து ஊக்குவித்த பான்மை மிகவும் பாராட்டற்பாலது.

ஆட்சிப் பொறுப்பாளர் வேண்டுகோளின்படி மாதவச் சிவஞான முனிவரர் மரபில் தோன்றிய சிவஞானம் பிள்ளையவர்கள் இன்முகமும் நன்மொழியும் புகன்று நூற்பெருமையும் கற்கவேண்டிய இன்றியமையாமையுங் கூறித் திறந்து வைத்தார்கள். ஆசிரியர் திரு. தூ. சு. க. அவர்கள் நூற்பெருமையெல்லாங் கூறி, சங்கரர், மாத்துவர், இராமானுசர் இவர்கள் எல்லாம் பேருரையியற்றிய 555 பிரம சூத்திரத்தின் பொருளும் அதற்கு மேற்பொருளும் நம் மெய்கண்டான் நூலில் அமைந்திருக்கும் பெற்றியைக் கூறித் துவக்கினர்.

சாத்தூர், திரு. தூ. சு. கந்தசாமி முதலியார் எம். ஏ. அவர்கள் வகுப்பைத் துவங்கித் தம் மும்மொழிப் புலமையாலும் செம்பொருட்டுணிவாம் சித்தாந்தத் தனித்தமிழ்ப் பொருள் நூல்கள் பதினான்கின்கண்ணும் மிக்க பயிற்சியும் சிறப்பாக மெய்கண்டாரருளிய சிவஞான போதத்தின்கண் ஆழ்ந்தகன்ற அறிவுநுட்பமும் வாய்ந்தவர். சிவஞானபோத நுண்பொருள்களைக் காசிப் பல்கலைக் கழகத்திலும் அலகபாத்துப் பல்கலைக் கழகத்தும் ஆங்கிலத்தில் ஆக்கி விரிவுரையாற்றிப் பொன்னும் புகழும் பெற்ற நன்னராளர். அவர்கள் குறித்தபடி "சிவஞானபோதச் சிற்றுரை" வகுப்பை மாண்புறத் துவக்கி மாணவர் உளங்கொள நிகழ்த்திவருகின்றனர்.

நண்பகல் 3-30 முதல் 5 மணிவரை ஐயத்தெளிவு வகுப்பைத் திரு. வித்துவான், மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள் நடத்தினர். இரவு, ஏழுமணி முதல் ஒன்பது மணி வரை சமயச் சொற்பொழிவுகள் வகுப்புப்போல் தொடர்ந்து நிகழ்ந்து வருவதாகும். வகுப்புத் துவங்கிய நன்னாள்,

"மங்கையர்க்குப் பேரரசி மாறனார் மெய்த்துணையார்
எங்கள் குலதெய்வம் யாவர்க்கும்—பொங்குதாய்
நீற்றறைச் சிவனெறியை நீள்தமிழை வையமெலாம்
போற்றவருள் செய்தார்தாள் போற்று"

என்னும் வழிபாட்டிற்குரிய, கேட்ட துணையானே திருமுலைப்பால் சுரந்தருளிய செந்நெறிகாத்த மானியராம் மங்கையர்க்கரசியார் திருநாள் (குரு பூசை). உண்மையருளன்பால் உந்தப்பட்டு வையமுய்யத்தொண் டியற்றுவார் தொண்டுகட்கெல்லாம் குறியாச் சிறப்பால் இங்ஙனம் நன்னாட்கள் வந்தமைவது பண்டு தொட்டுக் கண்டுங் கேட்டும் வரும் மெய்ம்மையாகும்.

"மங்கையர்க்கரசியார்" என்னும் சிறந்த பொருள்பற்றித் திருநெல்வேலி மந்திரமூர்த்தி உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. அ. க. நவநீத கிருட்டிண பிள்ளையவர்களும் "முதற்கடவுளுண்மை" என்னும் பொருள்பற்றிச் சாப்டர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. மாணிக்கவாசகம் பிள்ளையவர்களும் விரிவுரையாற்றினார்கள்.

"திருவுந்தியார்" என்னும் பொருள்பற்றி விருதுநகர் தமிழாசிரியர் வித்துவான், திரு. சேது ரகுநாதன் அவர்கள் விரிவுரை யாற்றினார்கள்.

"மங்கையர்க்கரசி" என்னும் பொருள்பற்றி ஆட்சிப் பொறுப்பாளர் அருமை மகள் சு. வடிவழகி அம்மையாரால் பேசப்பட்டது. மற்றொரு மகள் சு. வயிரமணி அம்மையால் "சிவஞானபோதச் சூத்திரம்" தெளிவாகவும் இனிமையாகவும் ஒப்புவிக்கப்பட்டது.

**28—4—52**

முறையாக வகுப்பும் ஐயத்தெளிவும் நிகழ்ந்துவருகின்றன. மாலைச் சொற்பொழிவு "அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர்" என்னும் பொருள்பற்றி வித்துவான் திரு. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள் அரியதோர் விரிவுரை யாற்றினார்கள். "சித்தாந்தத் தொன்மை" என்னும் பொருள்பற்றிச் சைவப் புலவர், டாக்டர், அண்ணாமலைப் பிள்ளையவர்கள் விரிவுரை யாற்றினார்கள். "அம்மையப்பரே" என்பதன் தொடர்பும் "இருவினை யுண்மை" என்னும் பொருளும் பற்றிக் கழகப் புலவர், திரு. ப. இராமநாத பிள்ளையவர்கள் விரிவுரை யாற்றினார்கள்,

**29—4—52**

"அறிவு விளக்கம்" என்னும் பொருள்பற்றி வித்துவான் திரு. சுந்தரமூர்த்தி அவர்கள் விரிவுரை யாற்றினர்கள்.

"அத்துவிதம்" என்னும் பொருள்பற்றி விரிவுரை யாற்றினர்கள்.

"பதி" என்னும் பொருள்பற்றி நெல்லைச் செங்குந்தர் துவக்கப் பள்ளி மாணவர்கள் உரையாடல் வழி விளக்கினர்கள்.

**30—4—52**

சிறந்த செந்தமிழ்த் தொண்டும் செந்நெறிச் சிறப்பும் தேய மெல்லாம் பரவி நன்னெறியும் நாடும் மொழியும் நலம் பயந் தோங்கப் பாடுபடுவதே பிறவிப் பெரும் பயன் என்று அல்லும் பகலும் ஒவாது ஒல்லும்வகை தொண்டாற்றித் "தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்" என்னும் சீரிய கழகத் தைத் தோற்றுவித்து அன்பறிவு ஆற்றல்களால் வளர்த்துக் குன்றின்மேல் நிறுவிய விளக்கென நின்று நிலவ நிலைப்பித்து எல்லா வகையானும் தம் மொப்பாராகத் தம் இளவல் திரு. வ. சுப்பையா பிள்ளையவர்களைப் பயிற்றுவித்து அவர்களைத் தொடர்ந்து நடத்திவருமாறு ஆக்கி, ஆண்டவன் அடியிணை எய்திய கழகத் தாயனையராம் திரு. வ. திருவரங்கம் பிள்ளையவர் களின் நன்னாள். அவர்கள் தம் அரும்பெரும் பண்பும் ஆற்ற லும் பிறவும் விளக்கிக் குலசை. ச. முத்துக்குமாரசுவாமி பிள்ளை யவர்கள் சிறந்ததோர் விரிவுரை யாற்றினர்கள்.

"மறக்கருணை" என்னும் பொருள்பற்றி, தமிழாசிரியர் வித்துவான், திரு. மு. கோவிந்தராசன் அவர்கள் விரிவுரை யர்ற்றினர்கள்.

"சிவசத்தி" என்னும் பொருள்பற்றிக் கழகப்புலவர் திரு. ப. இராமநாத பிள்ளையவர்கள் விரிவுரை யாற்றினர்கள்.

**1—5—52**

"இரு மணி" என்னும் பொருள்பற்றிக் கழகப்புலவர் பேராசிரியர் பெருநாவலர் திரு. பு. சி. புன்னைவனநாத முதலியா ரவர்கள் அரியதோர் விரிவுரை யாற்றினர்கள்.

"திருவடிப் பெருமை" என்பதுபற்றித் திருவிடைமருதூர் துறைசை ஆதீன உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், பொன். சுப்பிரமணியனர் அவர்கள் விரிவுரை ஆற்றினர்கள்.

"எழுத்துச் சீர்திருத்தம்" என்னும் பொருள்பற்றித் திருவாளர் டாக்டர் கணியர் திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை யவர்கள் ஆயிரக்கான பெருமக்கள் கூட்டத்திடையே பேசி

ணர்கள். அதன் சுருக்கம்: அரசியலார், பெருமக்களின் தொன்மைப் பண்பாட்டுக்கும் விருப்புக்கும் தமிழ் இயல்புக்கும் மாறுகவும், அரசியல் உரிமைச் சட்டத்துக்கு முரணுகவும் தமிழ் எழுத்துக்களை வேண்டாவகைச் சீர்திருத்தமென்னும் போலிப் பெயரால் அழித்தொழிக்க மடிகட்டிச் சூழ்ச்சி செய்தொழுகும் சிலர் வலையிற்பட்டு வெளிப்படுத்தியுள்ள கட்டளை ஒரு சிறிதும் பொருந்தாது என்றும் செல்லத்தக்கதல்லவென்றும், அவ்வாறு எழுத்துமாற்றம் செய்வராயின் தமிழின் அழகிழந்து உருக் குலைந்து கெடுதலுடன் அச்சுரு மாற்றத்தில் பழைய அச்சுருக் களை மாற்றிப் புது எழுத்துக்களை ஆக்குவதற்குத் தமிழ்நாடு முழுவதினும் எத்துணையோ நூருயிரக்கணக்கான பொரு ளிழப்பு ஏற்படும். அம்மட்டோ! எண்ணிறந்த தமிழ் நூற்கள் பயனின்றிப் பாழாகும். புதிய மாற்ற எழுத்துக்களால் ஆக்கப் படும் நூற்களை பழைய முறையில் பயின்ருர் கற்றுணர ஒண் ணுது. பர்மா, மலேயா, இலங்கை முதலிய வெளி நாட்டவரால் அச்சிடப்படும் நூற்களை நாம் கற்கமுடியாமலும் நம்முடைய நூற்களை அவர்கள் கற்கமுடியாமலும் பிளவுபடுத்தி ஒற்றுமை யைக் குலைத்து வேற்றுமைப்படுத்தும் வினையேயெனவும், நாம் எல்லாம் ஒன்றுகூடி எதிர்த்தொழிக்க வேண்டுமெனவும் கூறி ஞர்கள். அவையோர்களும் மிக்க கிளர்ச்சியொடு ஆதரித்தனர்.

அதன்பின் அரசியலார்க்கு அறிவித்து அத்தப்புக் கருத்தை நீக்கிக்கொள்ள வேண்டுமென, ஒரு தீர்மானம் திரு. இ. மு. சு. அவர்களால் கொண்டுவரப்பட்டுக் கழக ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வ. சு. அவர்களால் தக்க காரணங்கள் காட்டி விளக்கி வழி மொழியப்பட்டு அவையினர் அனைவர்களாலும் ஒரு மனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டது.

**2—5—52**

"சிவஞான முனிவர் திருநாள்" இந்நாளில் "அம் முனிவரர்" என்னும் பொருள்பற்றிக் கழகப்புலவர் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள் மகன் சிதம்பர சுப்பிரமணியம் அவர்கள் விரிவுரை யாற்றினர்.

"குறிக்கோள்" என்னும் பொருள்பற்றி நாகபட்டினம் நாட்டியல் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. வை. சண்முக தேசிகரவர்கள் விரிவுரை யாற்றினர்கள்.

"உயிருண்மை" என்னும் பொருள்பற்றிக் கழகப்புலவர் திரு. ப. இராமநாத பிள்ளையவர்கள் விரிவுரை யாற்றினர்கள்.

சிவஞான முனிவரனர் திருவரலாற்றை மிகத் தெளிவாக வும் இனிமையுடனும் கேட்டார் உளங்கொளுமாறும் வில்லுப்

பாட்டாகக் கழகத்தொண்டர் திரு. சீனிவாசன் குழுவினர் நிகழ்த்தி வியப்புறச் செய்தனர்.

ஒவ்வொரு நாளும் தொடக்கத்தில் கடவுள் வாழ்த்தும், அறிமுகப்படுத்தலும், ஈற்றில் கடவுள்வாழ்த்தும், நன்றி வணக்கமும் முறையே இசைவாணர்களாலும் நெல்லை மந்திரமூர்த்தி உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான், திரு. அ. க. நவநீத கிருட்டிண பிள்ளையவர்களாலும் வழுத்தப் பெறுவனவாம்.

"சிவஞானபோதம்"

இச் செந்தமிழ்த் தனிமுதனூல் மெய்கண்டான் நூலெனவும் வழங்கப்பெறும். இந்நூல் திருவெண்ணெய்நல்லூர் மெய்க்ண்ட நாயனாரால் அருளிச்செய்யப்பட்டது. இதற்கு முன்னரே, திருஉந்தியார், திருக்களிற்றுப்படியார் என்னும் இரு பெரும் நூற்களும் தமிழ் முதனூல்களாகவே வெளிவந்துள்ளன. நம் மெய்கண்ட நாயனார் தம் மாணாக்கர் அருணந்தி சிவனார் அருளிய நூல்: சிவஞானசித்தியார், இருபா இருபஃது என்னும் இரண்டும் ஆகும். மற்றொரு மாணாக்கர் மனவாசகங் கடந்தார் அருளிய நூல் உண்மைவிளக்கம் என்பதாகும். அருணந்திசிவனார் மாணாக்கர் மறைஞானசம்பந்தர். அவர்தம் மாணாக்கர் உமாபதிசிவனார் அருளிய சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் எட்டு நூற்களும் ஆகும். ஆக மொத்தம் பதினான்கு நூற்கள் தூய தனிச் செந்தமிழ்ப் பொருள் நூல்களாகும். திருமுறை பன்னிரண்டும் புகழ் நூல்களாகும்.

புகழ்நூல்கள் முழுமுதற் சிவபெருமானின் திருவருட்பண்புகளையும், செயல்களையும், அவன்றன் திருவடிப்பேரின்பப் பெருவாழ்வுகளையும் அடியார், உலகம், உலகியற் பொருள்கள் முதலியவற்றையும் கூறிப் புகழ்வனவாகும். பொருள் நூல்கள், உடையான், அடிமை, உடைமை என்னும் இறை, உயிர், தளை ஆகிய முப்பொருள்களைப் பற்றியும், அப்பொருள்களின் இயல்புகள் முதலியவற்றைப்பற்றியும் அளவை முறைப்படி அறிவுறுத்துகின்றன. அவற்றுள் மெய்கண்டார் அருளிய "சிவஞானபோதமென்னும் மெய்கண்டான் நூல், காண்டல், கருதல், உரை என்னும் மூன்றளவைகளுள்ளும் நாப்பணதாய்ப் பின்னிரண்டளவைகளில் தோற்றும் மலைவுகளையகற்றி உண்மையை வலியுறுத்தி உளங்கொள நிலைநாட்டுவது கருதலளவையாகும். கருதலளவை எனினும் வழியளவை எனினும் ஒக்கும். வழியளவையை அனுமானப் பிரமாணம் என்ப.

"மெய்கண்டான் நூல்"

"மங்கல வாழ்த்து" "அவையடக்கம்" சூத்திரம் முதலிய உறுப்புக்களைக்கொண்டு திகழ்கின்றது. சூத்திரம், சூத்திரக்கருத்து, மேற்கோள், ஏது, எடுத்துக்காட்டு என்னும் ஐந்து உறுப்புக்களைக்கொண்டு மலைவிளக்காக நிலையுறுகின்றது. மேலும் பொய்யாமொழியாம் திருக்குறள் ஓதற்கினிதாய் யாவர்க்கும் இன்றியமையாது வேண்டத்தக்கதாய், ஒப்பமுடிந்த ஒண்பொருளுடையதாய் விளங்குவதுபோல மெய்கண்டார் நூலும் விளங்குகின்றது. அவ்வுண்மை,

"வெய்யோ னொளியி லொடுங்கி விளங்காது
வெய்யோனை யாகாத மீன்போல—மெய்யவனிற்
**கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனைக்
கண்டடனுய் மன்னுதலைக் காண்."**　—ரு. 2 - 2.

இது, திருக்குறள்,

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள"

என்னும் திருப்பாட்டைத் தன்னகத்துக்கொண்டு திகழ்கின்றது. அம்மட்டுமன்று.

"வேதம் பசுவதன்பால் மெய்யா கமம்நால்வர்
ஓதும் தமிழதனின் உள்ளுறுநெய்—போதமிகும்
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ததமிழ் நூலின் சிறப்பு"

ஈண்டு வேதம் - திருக்குறள். ஆகமம் - திருமூலர் திருமந்திரம். நால்வர் - ஆளுடைபிள்ளையார், ஆளுடைய அரசு, ஆளுடைய நம்பி, ஆளுடைய அடிகள். ஓதும் தமிழ் - ஒன்று எட்டு வரையுள்ள எட்டுத் திருமுறைகள். மெய்கண்டான் தமிழ் - சிவஞானபோதம்.

இந்நான்கு நூற்களும் ஒன்றற்கொன்று ஏதுவும் பயனுமாய் உடங்கியைந்து பின்னி (அத்துவிதம்) நிற்பது காண்க. இவ்வுண்மை, நம் மூதாட்டியாராம் ஔவைப் பிராட்டியார் அருளிய,

"தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியுங்—கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்"

என்பதன்கண் வலியுறுத்தப்பெறுவதூஉம் காண்க. ஈண்டுத் திருநான்மறை என்பது ஐந்தெழுத் தருள்நிலை. முனி என்பது ஆளுடைய அடிகளாகிய மாணிக்கவாசகப் பெருமானார்.

மெய்கண்டான் நூல் பொது உண்மை என இரண்டு அதிகாரங்களையும், பிரமாண இயல், இலக்கணவியல், சாதனவியல்,

பயனியல் என்னும் நான்கியல்களையும் ஒவ்வோர் இயல்களுக்குச் சூத்திரம் மும்மூன்றாகப் பன்னிரு சூத்திரங்களையும், மூன்றாம், ஐந்தாம், ஒன்பதாம், பன்னிரண்டாம் சூத்திரம் நான்கும் நந்நான்கு வரிகளையும் ஏனைய எட்டும் மும்மூன்று வரிகளையும் கொண்டு நாற்பது வரிகளையும், இருநூற்றுப்பதினாறு சொற்களையும், அறுநூற்றிருபத்துநான்கு எழுத்துக்களையும் கொண்டு திருக்குறள்போல் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கும் பேரருமை வாய்ந்தது.

இதன் சூத்திரமும் பொருளும் நம் செல்வியில் செவ்விவாய்க்குந்தோறும் வரைவாம். ஈண்டு மங்கலவாழ்த்துப் பொருளை ஒரு சிறிது விளக்குதும் :—

“ கல்லா னிழன்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே ”

இத்திருப்பாட்டு, வஞ்சித்துறை. வாழ்த்தும், வணக்கமும், பொருளியல்புமெனத் திகழப்பெறாஉம் மூன்றனுள், இது பொருளியல்புரைத்தல். பொருளியல்புரைத்தலாவது, நூலகத்துக் கூறப்படும் பொருளும் முறையும் எண்ணும் பிறவும் புலமை மிக்கார் உய்த்துணர்ந்துரைக்கும் பான்மையதாய் அமைக்கப் பெறுவது. அவ்வாய்மைஇதன்கண் காண்க.

பன்னிரு சூத்திரங்களையும் கல் என்பது முதல் ஏ என்பது ஈறாகப் பன்னிருசொற்களால் விளக்கினர். அடிதொறும் மூன்று சொற்கள் வைத்து நான்கடியாகக் கூறவே மும்மூன்று சூத்திரங்களமைந்த நான்கியல்கள் பெறப்படும். அருளிய, புனைவர் என்னும் இருவேறு வினை முடிவுகளால் பொது உண்மையென்னும் இரண்டதிகாரம் பெறப்படும். இலக்கண இயலின் முதற் சூத்திரம் அளவை இயலின் இறுதிச் சூத்திரத்துடன் மாட்டெறியப்படுவதை மலைவு இல்லார் என இரண்டடியினும் சாரவைத்திருப்பதால் காண்க. கல்லானிழல் என்னும் இடங்கூறலால் அளவையையும், அருளிய எனச் செய்கை கூறலால் இலக்கணமும், மலர் எனத் திருவடி கூறலால் பயிற்சி (சாதனம்) இயலும், புனைவர் எனப் பேறு கூறவே பயன் இயலும் குறிப்பாற் பெறப்படும்.

இதன் பொருள், கல்லாலமரத்தடியில் வீற்றிருந்தருளிய தென்முகச்செல்வர் முனிவர் குழாங்களுக்கு மலைவு தீர்த்தருளினர். அவர் தமக்கும் அருள் செய்தற்பொருட்டு அவர்தம் அறிவாற்றலாம் மூத்த பிள்ளையாரின் திருவடியை மறவாவினையுடைய நல்லார் தலைமேற் சூடுவர்.

—இதழாசிரியர்.

# ஐயத்துக்கு விளக்கம்

[திரு. துடிசைகிழார், அ. சிதம்பரனார்.]

## I

'தொல்காப்பியத்தின் பழமை' என்ற கட்டுரை ஆசிரியர், 'ஊழி' என்ற சொல்லுக்கு நான் 'தமிழ்ச் சங்கங்களின் வரலாறு' பக்கம் 57-ல் கூறியுள்ள பொருளை விடுத்து, தாம் தமக்குத் தோன்றியவாறு வேறு பொருள் கொண்டதனாலேயே, அவருக்குக் காலமுரண் ஏற்பட்டதாகத் தோன்றியுள்ளது. அதனால் பல ஐயப்பாடுகள் அவர் மனத்தில் தோன்றியுள்ளன. அவ் ஐயத்தை இங்கே விளக்குகின்றேன். இவ்வாறு பலர்க்கும் ஐயம் உண்டாகும் என்று கருதியே, ஊழி என்ற சொல்லின் பொருளை பக்கம் 57-ல் வரையறுத்துக் கூறியுள்ளேன்.

ஊழி என்பது பிரளயம்—கேடுகாலம்—அழிவு என்று பொருள்படும். அப்பொருளில்தான் உரை ஆசிரியர்களும், நிகண்டு நூல் ஆசிரியர்களும், வானநூல் ஆசிரியர்களும் வழங்கி உள்ளார்கள். உலக வழக்கும் அதுவே.

ஆனால், இக்கட்டுரை ஆசிரியர் என்ன பொருள் கூறுகின்றார் என்பது கவனிக்கத்தக்கது. அவர் கொண்ட பொருள் :— ஊழி = பல நூற்றாண்டுகள் சேர்ந்த ஒரு காலம். அதாவது, கலியுகம், துவாபரயுகம் முதலியன போல என்கிறார். கட்டுரையில் அவர் வரைந்துள்ள சில அடிகளைக் கவனித்தால் இப்பொருள் அவர் கொண்டுள்ளார் என்பது தெரியும். அவர் வரைந்துள்ளதாவது :—

"முதல் ஊழி என்றால் முதல் கடல்கோளுக்கு முற்பட்ட காலம் என்றும், இரண்டாம் ஊழி என்றால் இரண்டாம் கடல்கோளுக்கு முற்பட்ட காலம் என்றும் கொள்ளுவதுதான் முறை. அதுவே பல ஆசிரியர்களின் கருத்துமாகும். எடுத்துக்காட்டாக **முதல் நூற்றாண்டு இறுதி என்றால் ஒரு நூற்றாண்டு முடிவதற்குமுன் என்பதுதான் பொருள்; முதல் நூற்றாண்டு முடிந்த இறுதியல்ல**" என்கிறார். எந்த ஆசிரியர் அவ்வாறு கூறியுள்ளார் என்று அவர் கூறவில்லை. பல ஆசிரியர்கள் கருத்தும் அதுவே என்று எழுதுவதால் பயன் இல்லை. தமிழ் நாட்டில் பெண்கள் தங்கள் மக்களைத் திட்டும்போதுங்கூட **"என்ன ஊழி வந்தது உங்களுக்கு"** என்று ஊழி என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். இங்கே உலக வழக்கிலும் ஊழி என்றால் **கேடுகாலம்** என்ற பொருளேயொழிய வேறில்லை.

எடுத்துக்காட்டாக, "இரோஷீமா—நாகசாகி ஊழி" என்ருல், சப்பான் தேசத்தில் அணுக்குண்டு எறியப்பட்டதனுல் இரோஷீமா நாகசாகி அழிந்த கேடுகாலத்தைக் குறிக்கும். "இரோஷீமா நாகசாகி ஊழியின் இறுதியில்" என்ருல், அந்த அழிவுக்காலம் ஏற்பட்டபின் என்று பொருளாகுமே யொழிய வேறன்று. ஆகையால் ஊழி என்பது அழிவு காலத்தை—பிரளயத்தைக் குறிக்கும். பல நூற்ருண்டுகள் சேர்ந்த ஒரு கால அளவைக் குறிக்காது. கண் மூடிக் கண் திறப்பதற்குள் ஏற்படும் ஒரு அழிவுக்கு ஊழி என்று பொருள்.

ஆகையால், முதலூழி என்பது குன்றமெறிந்த குமரவேள் வடிவேல் எறிந்ததால் ஏற்பட்ட அழிவுகாலத்தைக் குறிக்கும். அவ்வழிவு ஒரு மாத்திரைப் போதில் நடந்ததொன்ருகும். ஆதலின், முதலூழி ஏற்பட்டபின்தான் தலைச்சங்கம் குமரி யாற்றங்கரையில் இருந்த தென் மதுரையில் நடைபெற்றிருக்கிறது. இதனுல் முதலூழியில் குமரிக்கோடும்—குமரியாறும் தென் மதுரையும் அழியவில்லை என்பது தெளிவு. இவைகள் எல்லாம் இரண்டாம் ஊழியாகிய கி. மு. 9564-ல் ஏற்பட்ட கடல்கோளால் அழிவுற்றன. ஆதலின், முதலூழி இறுதி என்ருல் முதலூழிக்குப்பின் என்றும், இரண்டாம் ஊழி இறுதி என்ருல் இரண்டாம் ஊழி ஏற்பட்டபின் என்றும்தான் பொருள் ஆகும்.

## II

இனித் தொல்காப்பியப் பாயிரத்தில் கூறப்பட்டுள்ள "வட வேங்கடம் தென்குமரி" என்ற சொற்ருெடருக்குப் பொருள் காண்பாம்.

தொல்காப்பியப் பாயிரம் பனம்பாரனுர் பாடியதென்றும், தொல்காப்பியரே பாடினுர் என்றும் இருவகைக் கொள்கைகள் உண்டு. அதைப்பற்றி இங்கு இப்போது ஆராயவேண்டா. யார் பாடி இருந்தாலும் அச்சொற்ருெடருக்கு என்ன பொருள் என்று பார்ப்போம்.

இரண்டாம் ஊழியாகிய கி. மு. 9564-லேயே குமரிக் கோடும்—குமரியாறும்—தென் மதுரையும் கடல்கோளால் அழிவுற்றன. தொல்காப்பியமோ கி. மு. 6000-ல் பாடப்பட்டு அரங்கேற்றப்பட்டது. அதனுல், பாயிரம் பாடியவர் குமரி என்பதற்குக் குமரியாறு என்று பொருள் கொண்டிருப்பார் என்று சொல்லுவது பொருந்தாது. அது அவருக்குக் கருத்தானுல் குமரியாறு என்றே கூறியிருப்பார். அவர் அப்படிக் கூருமல் குமரி என்று மாத்திரம் கூறிப்போந்தார். "வடவேங்கடம் தென் குமரி யாயிடை" என்று மாத்திரம் பாயிரத்தில் கூறப்பட்டுள்

ளது காண்க. உச்சிமேற் புலவர் கொள்ளும் நச்சினார்க்கினிய ரும், "வடக்கின்கண் வேங்கடமும், தெற்கின்கண் குமரியும் ஆகிய அவ்விரண்டு எல்லைக்குள்ளிருந்து" என்றே உரை வகுத்துள்ளார்.* அதனால் உரையாசிரியரும் யாது என்று பொருள் கூறவில்லை. நச்சினார்க்கினியரே விளக்க உரையில், "நிலங்கடந்த நெடுமுடி யண்ணலை நோக்கி உலகம் தவம் செய்து வீடுபெற்ற மலையாத லானும், எல்லாரும் அறியப்படுதலானும், வேங்கடத்தை எல்லை யாகக் கூறினார். குமரியும் தீர்த்தமாகலின் எல்லையாகக் கூறினார்" என்கிறார்.†

இங்கே, வடக்கே நெடுமுடி அண்ணலையும் அவர் மலையை யும் எல்லையாகக் குறித்தவர், தெற்கே குமரித் தெய்வத்தையும் குமரித் தீர்த்தத்தையும் எல்லையாகக் குறித்தார். வடக்கே ஒரு தெய்வம்—தெற்கே ஒரு தெய்வம்; வடக்கே ஒரு மலை, தெற்கே ஒரு தீர்த்தம் என்பன கூர்ந்து நோக்கத்தக்கது. ஆகையால், உரையாசிரியரும் குமரி என்றால் குமரியாறு என்று பொருள் கூறவில்லை.

குமரி இன்றும் ஒரு தீர்த்தமாக உள்ளதும், யாவரும் அங்கே சென்று தீர்த்தம் ஆடி வருவதும் கண்கூடு.

சிலப்பதிகார காலத்திலும் மாடலன் குமரித்தீர்த்தம் ஆடி யதை,

"குமரியம் பெருந்துறை ஆடி மீள்வோன்"
(நீர்ப்படை - 69.)

"குமரியம் பெருந்துறை கொள்கையிற் படிந்து"
(அடைக்கல - 15.)

என்று சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டுள்ளன காண்க.

இனி, அவ்விளக்க உரையின் இறுதியில், "வடவேங்கடம் தென்குமரி இவை இரண்டும் அகப்பாட்டு எல்லை ஆயின; என்னை? குமரியாற்றின் தெற்கு நாற்பத்தொன்பது நாடு கடல் கொண்டதாகலின்" என்கிறார்.‡ இங்கே, குமரியாற்றின் தெற்கு என்ற சொற்றொடரை வைத்துக்கொண்டுதான் உரையாசிரியர் முன்னால் கூறியவைகளை விடுத்து, குமரி என்றால் குமரியாறு என்று சிலர் பொருள் கொண்டதால் கால முரண்பாடு ஏற்பட்டதாகக் கருதுகிறார்கள். அச்சொற்றொடர்க்கு உரையாசிரியர் முன்பின் முரண் இல்லா மல் கொண்ட பொருள் என்ன? என்று பார்ப்போம்.

---

* தொல்காப்பியம் - மகாலிங்கையர் பதிப்பு - பக்கம் 4.
† ,, ,, ,, 5.
‡ ,, ,, ,, 6.

"குமரியாற்றின்" என்ற சொல்லின் ஈற்றில் உள்ள 'இன்' என்பது ஏழாம் வேற்றுமை உருபு ஆகும்.* குமரியாறும் நாற்பத்தொன்பது நாடுகளும் ஒரே நிலப்பரப்பை உடையன ஆதலால், இன் உருபு தற்கிழமைப்பொருளில் வந்துள்ளது காண்க. ஆதலால், அச் சொற்றொடர்க்கு "குமரியாற்றுடன் 49 நாடுகளும் கடல்கொண்டதாகலின்" என்றுதான் உரையாசிரியர் பொருள் கொண்டிருக்கிறார்.

இங்கே, "குமரியாற்றின் தெற்கு நாற்பத்தொன்பது நாடு கடல் கொண்டதாகலின்," என்ற சொற்றொடரில் உரையாசிரியர் நாற்பத்தொன்பது நாடுகள் அழிந்த முதலூழியையும், குமரியாறு அழிந்த இரண்டாம் ஊழியாகிய இடையூழியையும் குறித்துள்ளார் என்பது, வடக்கே வேங்கடநாதனையும் வேங்கடமலையையும், தெற்கே குமரித் தெய்வத்தையும் குமரித் தீர்த்தத்தையும் குறிப்பிட்டு உரை வகுத்திருப்பதால் வெளியாகின்றது. குமரியாறு என்று பொருள் கொண்டால் உரையாசிரியருடைய உரை முன்பின் முரண்படும். ஆதலால், முரண் ஏற்படாமல் பொருள் கொள்ளுவதுதான் பொருத்தம்.

முதற்சங்கம், அதாவது, தலைச்சங்கம் நடைபெற்றது குமரியாற்றங்கரையில் இருந்த தென்மதுரை ஆகும். இடைச்சங்கம் நடைபெற்றது தாம்பிரபரணி ஆற்று முகத்துவாரத்தில் இருந்து அழிந்துபோன கபாடபுரம் ஆகும். கட்டுரை ஆசிரியர் கருதுகிறபடி தொல்காப்பியர் காலத்தில் குமரியாறும் தென்மதுரையும் இருந்திருந்தால் தமிழ்ச்சங்கத்தைக் கபாடபுரத்துக்கு மாற்ற வேண்டிய அவசியமே இல்லையாகும். மேலும், கி. மு. 6000-ல் நடந்த சரித்திர காவியமாகிய இராமாயணத்தில் இடைச்சங்கம் நடைபெற்ற கபாடபுரத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதேயொழிய, வேறில்லை. அக்காலத்தில் குமரியாறும் தென்மதுரையும் இருந்திருந்தால் இராமாயணத்தில் வால்மீகி அவைகளைக் கூறாமல் இருக்கமாட்டார். ஆகையால், தொல்காப்பியர் காலத்தில் குமரியாறும் தென்மதுரையும் இருக்கவில்லை; அவை அழிந்து போயின என்பது தெளிவு. ஆகையால், தமிழ்ச்சங்கங்களின் வரலாறு பக்கம் 55-ல் கூறப்பட்டுள்ள செய்திகள் வலியுறுகின்றனவேயொழிய வேறில்லை. பொருத்தமில்லை என்று கட்டுரை ஆசிரியர் கூறுவது பொருந்தாமை காண்க.

## III

இனித் தமிழ்ச்சங்கங்களின் வரலாறு பக்கம் 71-ல் ஏதோ சில முரண்பாடுகள் உளவெனக் கட்டுரை ஆசிரியர் கூறுகிறார். அதனையும் ஆராய்வாம்.

---

* நன்னூல் வை. மு. சடகோபஇராமாநுச ஆச்சாரியார் உரை, பக்கம் 199.

பக்கம் 71-ல் நான் குறிப்பிட்டுள்ளது சிலப்பதிகார வேனிற் காதையில் "நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்" என்ற அடிக்கு அடியார்க்கு நல்லார் கூறியுள்ள உரையின் முதற் குறிப்பு ஆகும். நான் அவ்வுரையை முற்றும் குறியாது சில சொற்றொடர்களையே காட்டியுள்ளேன். நான் அங்கு காட்ட வந்தது, "மூன்றும் நிலந்தருதிருவிற் பாண்டியன் என்பவன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீஇயினான்," என்பதே யாகும்.

நிலந்தருதிருவிற் பாண்டியன் என்னும் பெயரை உடைய பாண்டியர்கள் நால்வர் உண்டு. இச் செய்தியை 'சங்கங்களின் வரலாறு' பக்கம் 12, 13, 14-ல் விவரித்துள்ளேன். ஆதலின் மீண்டும் இங்கே அவற்றை எழுதவில்லை.

"அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி என்னும் ஆற்றிற்கும் குமரி என்னும் ஆற்றிற்கும் இடையே" என்று அடியார்க்கு நல்லார் முதல் ஊழியில், அதாவது, கி. மு. 14058-ல் ஏற்பட்ட கடல் கோளால் அழிந்தவற்றைக் குறிப்பிடுகிறாரே ஒழிய வேறில்லை. முதலூழியில் பஃறுளியாற்றுக்கும் குமரியாற்றுக்கும் இடையே உள்ளவை அழிந்தன என்று கூறுவதுடன் குமரியாறு இருந்தது என்று கூறுகிறார்.

குமரி ஆறும்—குமரிக் கோடும்—தென்மதுரையும் கி. மு. 9564-ல் நடந்த இரண்டாம் ஊழியாகிய கடல் கோளால் அழிவுற்றதனால்தான், முதுகுடுமிப் பெருவழுதியின் தமிழ்ச்சங்கம் கொற்கையிலும், அதன்பின் இடைச்சங்கம் தாம்பிரபரணி ஆற்றின் முகத்துவாரத்தில் இருந்த கபாடபுரத்திலும் நடைபெற்றன. ஆதலின், குமரியாறும் தென்மதுரையும் இடைச்சங்க காலத்தில், அதாவது தொல்காப்பியர் காலத்தில் இல்லை யென்பதே தெளிவு.

## IV

இனிக் கட்டுரை ஆசிரியர் கடைசியாகக் கூறியவற்றைச் சிறிது ஆராய்வாம்.

"இறையனார் அகப்பொருள் உரையில் இடைச்சங்கம் இருந்த நகர் கபாடபுரம் என்றும், இடைச்சங்கத்தார்க்கு நூல் தொல்காப்பியம் என்றும் கூறப்பட்டுள்ளது. அதனுள் முதற் சங்கத்தார்க்கு நூல் தொல்காப்பியம் என்று கூறப்படவில்லை," என்கிறார். உண்மையே; முதற் சங்கத்தார்க்கு நூல் தொல்காப்பியம் என்று யார் கூறினார்? தமிழ்ச் சங்கங்களின் வரலாற்றில் இவர் எங்கு அவ்வாறு கண்டார்? தமிழ்ச் சங்கங்களின் வரலாற்றில் முதற்சங்கம் என்கிற தலைச்சங்கத்தார்க்கு நூல்

அகத்தியம் என்றும், இடைச் சங்கத்தார்க்கு நூல் தொல்காப்பியம் என்றும் கூறப்பட்டுள்ளது காண்க. (பக்கம் 53, 73).

**“இவ்வாசிரியர் (தொல்காப்பியர்) ஆதி ஊழியின் அந்தத்தே இந் நூல் செய்தபின்”** என்று தொல்காப்பிய உரையில் காணப் படுவதாகக் கூறுகிருர் கட்டுரை ஆசிரியர். இவ்வரிக்கு, “ஆதி ஊழியின் அந்தத்தே (நூல்) செய்து, இரண்டாம் ஊழியின் தொடக்கக் காலத்தில் அரங்கேற்றப்பட்டது என்று விளங்கு கிறது,” என்கிருர் கட்டுரை ஆசிரியர். இப்பொருள் கட்டுரை யாசிரியர் கொண்ட பொருளே அல்லாமல் உரையாசிரியர் கொண்ட பொருள் அல்ல. அதனைச் சிறிது விளக்குவாம்:— **“யுகமுடிவுடன் மடங்கல் ஊழியாம்”** என்பது பிங்கலந்தை. ஆதலின், ஊழி=யுகமுடிவு — பிரளயம் — கேடுகாலம் — அழிவு ஆகும். பூதத்துவ நூலாசிரியர் எலியட் என்பவர் ஐந்து ஊழிகளைப்பற்றிக் கூறுகிருர். அவைகளில் அவர் கூறுகிற 5-வது ஊழி கி. மு. 9564-ல் ஏற்பட்டது. *அதற்குப்பின் ஏற்பட்ட பல ஊழிகளைப்பற்றிச் சங்க வரலாறு பக்கம் 93-ல் காணலாம்.

உரையாசிரியர் ‘ஆதியூழி’ என்று காலம் குறிப்பிடாமல் பொதுவாகக் கூறுவதால், கழகத்தமிழ் வினவிடை இரண்டாம் பாகம் பக்கம் 26-ல் குறிப்பிடப்பட்டுள்ள நூல்களின் ஆதாரங்களைக் கொண்டு, சரித்திர முரண் ஏற்படாமல் ஆதியூழி என்றால் கி. மு. 14058-ல் நடந்தது என்று குறிப்பிட்டுள்ளேன். மேலும், உரையாசிரியர் “ஆதி ஊழியின் அந்தத்தே,” என்றுதான் கூறியிருக்கிருர். முதலில் ஏற்பட்ட அழிவின் முடிவு (ஆதி ஊழியின் அந்தம்) என்றால் முதலில் ஏற்பட்ட அழிவுக்குப் பின்னல் என்றுதான் பொருளாகும். பின்னல் செய்யப்பட்டது என்றால் எவ்வளவு காலம் பொறுத்துச் செய்யப்பட்டது என்று அவர் கூறவில்லை. பொருள் செய்கிறவர்கள் “இரண்டாம் ஊழித் தொடக்கக் காலத்தில்” என்று பொருள் கொள்ளுகிருர்கள். ஊழிதான் (அழிவு) ஒரு கண நேரத்தில் முடிந்து விடுகிறதே. அதில் தொடக்கமேது? நடக்கும் காலமேது? முடிவு ஏது? இங்கேயும் கட்டுரை ஆசிரியர் இரண்டாம் ஊழியின் தொடக்கம் என்று ஊழி என்றால் கலியுகம் போன்ற பல நூற்ருண்டுகள் சேர்ந்த ஒரு கால அளவு என்று கருதியதனல் ஏற்பட்ட பிழைபாடே ஆகும். ஆதலின, முதலூழிக்குப் பிறகு தொல்காப்பியம் செய்யப்பட்டது என்றுதான் உரையாசிரியர் கூறினதாகக் கொள்ள வேண்டும். அது எவ்வளவு காலத்துக்குப்பின் என்று அவர் கூருததால் நாம் சரித்திர முரண்பாடு இல்லாமல் பொருள்

---

* கழகத் தமிழ் வினவிடை— இரண்டாம் பாகம் பக்கம் 25.

கொள்ளவேண்டுமே யொழிய வேறு விதமாகப் பொருள் கொள்ளக் கூடாது.

'**நிலந்தருதிருவிற் பாண்டியன்**' என்னும் பெயரையுடைய ஒரு பாண்டியன் காலத்தில் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது என்பது உண்மை. **நிலந்தருதிருவிற் பாண்டியன்** என்பது அவனுடைய சிறப்புப் பெயர் என்கிறார். அதனால், அப் பெயரால் அவன் கடல்கோளுக்கு முன்னும் பின்னும் இருந்தான் என்கிறார். அப்பெயரில் அம்மாதிரி பொருள் கொள்ள இடமில்லை என்பது படிப்போருக்கு விளங்கும். கட்டுரையாசிரியர் பொதுவாகக் கூறுகிறாரே ஒழிய எந்த நிலந்தருதிருவிற் பாண்டியன் என்றும், எந்தக் கடல்கோள் என்றும் கூறவில்லை. ஆதலின், அதனை விடுக்க.

## V

"நிலந்தருதிருவிற் பாண்டியன் தெற்கே பஃறுளியாறு கடல் கோட்படுவதற்கு **முன்னும் பின்னும் இருந்தவன்** என்ப. அது தலைச்சங்கத்தின் இறுதிக்காலமும், இடைச்சங்கத்தின் முதற் காலமுமாகும்," என்று சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தாரின் தொல்காப்பிய மூலவெளியீட்டுப் பதிப்புரையில் காணப்படுகிறது. ஆதலால், குறிப்புரை எழுதிய கழகப்புலவர் இளவழகனார் அவர்களுக்கும் இக்கருத்து ஒத்ததாகும்," என்று கட்டுரையாசிரியர் கூறி, சங்கவரலாற்றில் கூறப்பட்டுள்ளது இதற்கு முரண் ஆகிறது என்று கூறுகிறார். அப்படிக் கழகப் பதிப்பில் கூறப்பட்டிருந்தால், சரித்திர ஆராய்ச்சி, கால ஆராய்ச்சி இன்றிப் பொதுவாக கூறப்பட்டதேயொழிய ஆராய்ந்து கூறிய கூற்றாக இராது. என்னெனின், இறையனார் அகப்பொருள் உரையில், "தலைச்சங்கம் இரீயவர் **காய்சின வழுதி முதல் கடுங்கோன் ஈறாக** எண்பத்தொன்பது பாண்டியர்," என்றும், "இடைச்சங்கம் இரீயவர் **வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் ஈறாக** எழுபத்தொன்பது பாண்டியர்" என்றும் நக்கீரனார் கூறி இருப்பதற்கு முற்றும் முரணாக ஏற்படும்.

தலைச்சங்கத்து இறுதிக்காலத்தில் இருந்தவன் **கடுங்கோன்** என்னும் பாண்டியன்—இடைச்சங்கத்தின் தொடக்கத்தில் இருந்தவன் **வெண்டேர்ச்செழியன்** என்னும் பாண்டியன் என்று ஏற்படுகிறதேயொழிய நிலந்தருதிருவிற் பாண்டியன் அல்ல என்பது வெளிப்படை. கட்டுரை ஆசிரியர் கருத்துப்படி தலைச் சங்கத்துக் கடைசிப் பாண்டியனும், இடைச்சங்கத்து முதற் பாண்டியனும் நிலந்தருதிருவிற் பாண்டியன் என்ற சிறப்புப் பெயரை உடைய பாண்டியன் ஒருவனே என்று ஆகிறது. அப்படி இல்லை என்பதனை மேலே காட்டினும். ஆதலின் கழகப்

பதிப்பில் அவ்வாறு கூறப்பட்டிருந்தால் அதனை ஆதாரமாகக் கொள்ளக்கூடாது.

"ஆசிரியர் மா. இராசமாணிக்கம் அவர்கள் மூன்று சங்கங்கள் இருந்தன என்ற களவியல் கூற்றுக்கு வேறு சான்றில்லை. அக்கூற்றில் முதற்சங்கம் தென்மதுரையில் நடந்தது. அஃது அகத்தியர் காலம். பிறகு அது கடல் கொண்டது. அதன் பின்னர் இரண்டாம் சங்கம் அலைவாயிற் (கபாடபுரம்) கூடியது. அப்பொழுது தொல்காப்பியம் செய்யப்பட்டது," என்று கட்டுரை ஆசிரியர் கூறுகிறார்.

இதில் என்ன முரண்பாடு என்பதனை விளக்கவில்லை. ஆசிரியர் இராசமாணிக்கம் சங்கங்கள் இருந்தன என்ற களவியற் கூற்றுக்கு வேறு சான்றில்லை என்கிறார். வேறு சான்றுகள் வேண்டும் என்பவர்கள் "தமிழ்ச் சங்கங்களின் வரலாறு" என்ற நூலின் பின் இணைப்பு என்பதனைப் படித்துப்பார்க்கட்டும்.

அவர் சங்கங்கள் நடந்தன என்று ஒப்புக்கொண்டு, "தலைச் சங்கம் (முதற்சங்கம்) தென்மதுரையில் நடந்தது. அஃது அகத்தியர் காலம். பிறகு அது கடல் கொண்டது. அதன் பின்னர் இரண்டாம் சங்கம் (இடைச்சங்கம்) கபாடபுரத்தில் கூடியது. அப்பொழுது தொல்காப்பியம் செய்யப்பட்டது," என்கிறார். இது உண்மையே. சங்க வரலாற்றிலும் அப்படியே தான் கூறப்பட்டுள்ளது.* ஆதலின், சங்க வரலாற்றுக்கும் ஆசிரியர் இராசமாணிக்கம் கூறுவதற்கும் முரண்பாடு இன்மை தெளிக. கிரேதாயுகம் முதலிய நான்கு யுகக் கட்டுப்பாடுகள் பாரத காலத்தில் இருந்த வியாசர் காலத்துக்கு முன் கிடையாது என்றும், யுகம் என்ற சொல் எந்தெந்தப் பொருளில் வழங்கப்பட்டுள்ளது என்றும், சங்க வரலாறு பக்கம் 45—46ல் விளக்கப்பட்டுள்ளது காண்க. ஆதலின் இராம இராவணப்போர் திரேதாயுகத்தில் நடந்தது என்று கூறுவது தற்காலச் சரித்திர ஆராய்ச்சிக்கு முற்றும் முரண் ஆகும். இராமாயணகாலம் திரேதாயுகம் என்று கொண்டால், இற்றைக்கு இராமர்காலம்

| | கி. பி. | ஆண்டுகள் |
|---|---|---|
| கலியுகத்தில் | 1951-க்கு | 5053 |
| துவாபரயுகம் | ,, | 8,64,000 |
| திரேதாயுகம் | ,, | ............ |
| | | 8,69,053 |

கட்டுரை ஆசிரியர் திரேதாயுகத்தில் இராம இராவணப் போர் எத்தனையாவது ஆண்டில் நடந்தது என்று கூறவில்லை. பருப்

*சங்க வரலாறு பக்கம் 53, 71

படியாக "திரேதாயுகத்தின் நிகழ்ச்சி," என்கிறார். அப்படியே அவர் கூற்றுப்படி திரேதாயுகத்தின் கடைசி ஆண்டு என்று கொண்டாலும் எட்டு இலக்கத்து அறுபத்தொன்பதாயிரத்து ஐம்பத்துமூன்று ஆண்டுகளின் முன்பு என்று ஏற்படுகிறது. தற்கால சரித்திர ஆராய்ச்சியாளர்கள் யாராவது இதனை ஒத்துக் கொண்டிருக்கிறார்களா என்று கட்டுரை ஆசிரியர் காட்டுகிறவரை யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆதலின், இது சில மதப்பற்று உள்ளவர்களின் கூற்றாக முடியுமே ஒழிய வேறின்று.

கி. பி. 754 முதல் கி. பி. 798 வரை சேரநாட்டை அரசாண்ட குலசேகராழ்வார் என்ற இரண்டாம் சேரமான்பெருமாள், கலியுகத்தில் 28-ம் ஆண்டு பராபர—மாசி—சுக்கிலபக்கம்—துவாதசி—வெள்ளிக்கிழமை புனர்பூசத்தில் பிறந்தார் என்று மதக்கிரந்தத்தில் கூறியுள்ளதுபோல, இராமரைப் பற்றியும் திரேதாயுகத்தில் இருந்தவர் என்று சில மதப்பற்றுள்ளவர்கள் கூறியதை சரித்திர பாகத்துக்கு எடுத்துக்கொள்ள முடியாது. அது, சரித்திரத்துக்கு ஒத்துவரவும் வராது.

இதுவரை ஆராய்ந்தவற்றால் "தமிழ்ச் சங்கங்களின் வரலாற்றில்" கூறப்பட்டுள்ள செய்திகள் பொருத்தமுள்ளவைகளேயொழிய பொருத்தமில்லாதவைகள் அல்ல என்று ஏற்படுகிறது காண்க.

## VI

### முடிவு

இக்கட்டுரையின் கடைசிப் பகுதியை நோக்குமிடத்து, முதல் ஊழி என்றால் முதல் யுகம், அதாவது, கிரேதாயுகம் என்றும், இரண்டாம் ஊழி என்றால், திரேதாயுகம் என்றும் கட்டுரை ஆசிரியர் பொருள் கொண்டிருக்கிறார் என்று அறியக் கிடக்கின்றது.

ஊழி என்ற சொல்லுக்கு யுகம் என்ற பொருள் உண்டு என்றால் அகராதிக்காரர்களும் நிகண்டுநூல் ஆசிரியர்களும் அப்படியே (ஊழி=யுகம் என்றே) கூறி இருப்பார்கள். அப்படிக் கூறவில்லை என்பது கண்கூடு. ஊழி=யுகமுடிவு என்றே கூறியிருக்கிறார்கள். ஊழி என்ற சொல்லுக்கு யுகம் என்ற பொருள் இருந்தால் யுகமுடிவு என்று கூறவேண்டிய அவசியமே இல்லை. யுகம் என்ற சொல்லுக்கும் யுகமுடிவு என்ற சொற்றொடருக்கும் உள்ள வேறுபாட்டைக் கற்றோர் உணரவேண்டும்.

முடிவு என்றால் அழிவு என்றே பொருள் ஆகும். ஒருவனுடைய ஆயுள் முடிந்தது என்றால், ஆயுள் அழிந்தது—அவன் செத்தான் என்றே பொருளாகும்.

1950-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம்தேதி இரவு 12மணிக்கு, 1950-ம் ஆண்டுமுடிந்தது என்முல், 1950-ம் ஆண்டு அழிவுற்றது, இறந்தது என்றே பொருள் ஆகும். அதுபோல, யுகமுடிவு என்முல் யுகம் அழிந்தது என்றே பொருள் ஆகும். அந்த அழிவுக்குத்தான் ஊழி என்று பெயர். யுகத்துக்கு அல்ல என்பதனை உணரவேண்டும். அதனுலேயே நிகண்டு நூலாசிரியர்களும் அகராதிக்காரர்களும், ஊழி=யுகமுடிவு என்று பொருள் செய்தனர்.

முதல் ஊழியைக் கிரேதாயுகம் என்றும், இரண்டாம் ஊழியைத் திரேதாயுகம் என்றும் கூறினுல், மூன்ரும் ஊழி துவாபரயுகமும், நான்காம் ஊழி கலியுகமும் ஆகும். அம்மாதிரி வழக்கு உலகத்தில் உண்டா? எந்த நூல் ஆசிரியர், அல்லது எந்த உரையாசிரியர் நான்கு யுகங்களை நான்கு ஊழிகள் என்று கூறியுள்ளார் என்பதனை விளக்கிக் காட்டாதவரையில் அப்பொருள் ஒத்துக்கொள்ளக் கூடியதல்ல.

---

## தமிழ் இசை

இசை என்பது அறிவுதிருந்தாத குழந்தைகள் முதல் பெரியோர்வரை யாவரையும் வேறு உயிரினங்களையும் தன் இனிய ஒலியமைப்பால் பிணிக்கும் தகையது. அதிலும் தமிழ் இசை, மிக்க இனிமை வாய்ந்தது. இவ் இசையால் கல்லும் உருகும்; கடலும் பணியும் என்முல் வேறு கூறுவதென்? இவ் இசை, ஏனைய மொழி இசையினும் இயற்கைத் தன்மையே உருவாகக் கொண்டது; அதனுல் இவ்விசைக்கு மனத்தைத் தன்பால் ஈர்க்கும் வாய்ப்பு மிக்குள்ளது; இவ் இசையை வானம்பாடிப் பறவை கற்றது; வண்டுகள் பயின்றன; மூங்கிலும் பழகியது.

'பொன்பாற் பொருவும் விரை அல்லி புல்லிப் பொலிந்த பொலந்தாது-தன்பால் பொருவும் குழல்வண்டு **தமிழ்ப் பாட்டிசைக்கும்** தாமரையே' என்ருர், கம்ப நாடரும்.

இத் தமிழிசையை முன்னேர் முறைப்படி பாதுகாத்து வளர்த்து உலகெலாம் பரப்புதல் தமிழர்தம் கடனுகும்.

செல்லூர்க்கிழார்.

# கழற்சிங்கன் யார்?

[புலவர் திரு. நல்லொளியன், கரூர்.]

நாட்டில் மாணவர்கள் எல்லோரும் வரலாற்று நூற்களை முறையாகக் கற்று வருகின்றனர். அவற்றுள் "பல்லவர் வரலாறும்", "தமிழ் வரலாறும்" புலவர் மாணவர்கட்குப் பயிற்றுவிக்கப்படுகின்றன. பலர் இலக்கிய வரலாற்று முறையில் சுந்தரர் காலமும் கழற்சிங்கநாயனாரும் பற்றிய செய்திகளை ஒருவருக்கொருவர் மாறுபட்ட நிலையில் .வரைந்துள்ளனர். அவற்றுள், பல்லவ மன்னருள் கழற்சிங்கன் யார்? என்பது பற்றி மூன்றுவிதமான கருத்துக்கள் நிலவுகின்றன. அதில் எது உண்மை என்பதை உணராது மாணவர் மயங்குகின்றனர். ஆதலால் அம்மயக்கந் தீர ஓர் முடிவைக்காட்டுவதே இக்கட்டுரையாகும்.

**மாறுபட்ட கருத்துக்கள்**

1. தந்தி வர்ம பல்லவனே கழற்சிங்கன் என்பர் காலஞ்சென்ற திரு. K. சீனிவாசபிள்ளை அவர்கள்.*

2. நந்திவர்ம பல்லவன் III என்பர் திரு. C. மீனாட்சியாரும் திரு. மா. இராசமாணிக்கனாருமாவர்.†

3. இராசசிம்மன் I அல்லது நரசிம்ம பல்லவன் II என்பர் திரு. வை. சதாசிவப் பண்டாரத்தார். ‡

இக் கருத்துக்களை நோக்குழி ஒருவர் சென்றவழி ஒருவர் செல்லாமையும் சுமார் நூற்றாண்டுகளுக்கு மேல் ஏற்றத்தாழ்வும் பெருமலைப் பூட்டுவனவா யமைந்திருக்கின்றன. இதனுள் முதற் கருத்தை ஆராய்வோம்.

**தந்திவர்மன் கழற்சிங்கனா?**

தந்திவர்மன் கழற்சிங்கனே என்பார் காட்டும் சான்று சுந்தரர் தேவாரத்தில் தில்லைப் பதிகத்தில் வந்துள்ள,

"கருமையார் தருமனார் தமர்நம்மைக் கட்டியகட் டறுப்பிப் பானை
யருமையாம் தன்னுலகந் தருவானை **மண்ணுலகங் காவல் பூண்ட**
**உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா மன்னவரை மறுக்கஞ் செய்யும்**
**பெருமையார்** புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமானைப் பெற்றா மன்றே.§

---

* தமிழ் வரலாறு இரண்டாம் பாகம்.

† பல்லவர் வரலாறு — Dr. C. மீனாட்சியம்மையார் "Life under the Pallavas" P. 298 and 300.

‡ தமிழ்ப்பொழில் துணர் 3. பக்கம் 206—208.

§ சுந்தரர் தேவாரம். தில்லைப்பதிகம். பாடல் 4.

என்ற பாடலாகும். இப்பாடலில் தடித்த எழுத்திலுள்ள பகுதிகட்கு அவர்கள் கொண்ட பொருள், "பல்லவர்க்குக் கீழ்ப்பட்டிருந்த சிற்றரசர்கள் எல்லாரும் திறை கொடுக்க மறுத்தனர்," என்பதாகும். அத்தகைய நிகழ்ச்சி பெரிதும் பல்லவராட்சியில் நிகழவில்லை. தந்திவர்மன் கி. பி. 775 முதல் கி. பி. 825 வரை யாண்டு வந்தவனுவான். அவன் காலத்தில் வடக்கிலும் தெற்கிலும் போர் நிகழ்ந்து பல்லவப் பேரரசின் பரப்புக் குறைந்தது. அதனையே தமக்குத் தக்க சான்ருகக்கொண்டு திரு. சீனிவாச பிள்ளை தந்திவர்மனே கழற்சிங்கனென்றூர். அப்பாடல் அடிகளை நாம் கூர்ந்து நோக்கின் அவை "இந்நில வுலகத்தை உரிமையோடு காப்பாற்றி வருகின்றவர் பல்லவர் என்பதும் அப் பல்லவர்க்குத் திறை கொடுக்கும் மக்களை (அரசரை)ப் புலியூரான் பேணி வருகின்ருன் என்பதும் அவ்வாறு திறை செலுத்த மறுக்கும் பல்லவர் பகைவர்கட்குக் கூத்தப் பெருமான் துன்பங்களைச் செய்து வருகின்ருன் என்பதுமாகிய பொருளைத் தருவதன்றிச் சீனிவாசபிள்ளை கருதிய பொருள் தரவில்லை.* ஆதலால் தந்திவர்மன் கழற்சிங்கன் அல்லன் என்பது பெறப்படும். அஃதன்றியும் இவனது பெயரையும் சமயநெறியையும் நோக்கின் நனி விளங்கும்.

தந்திவர்மனுக்கு "வைரமேகன்" என்ற மறுபெயருண்டு. இப்பெயர் யாவும் இராட்டிரகூட மன்னனுகிய இவன் தாய்ப் பாட்டன் தந்திதுர்க்கன் பெயர்களேயாகும். வைரமேகன் என்பது திருமாலுக்குரிய பெயர்களுள் ஒன்ருகும். அஃதன்றியும் "இவன் செந்தாமரைக் கண்ணனை திருமாலின் அவதாரமானவன்" என்று பட்டயங்கள் கூறுகின்றன. ஆதலால் இவன் வைணவன் என்பது நன்கு புலனுகின்றது. ஆயினும் சைவ வைணவ சமயப் பொறையுடையவன். திருத்தொண்டத் தொகை பாடிய சேக்கிழாரடிகள் கழற்சிங்கர் புராணத்தில்,

> "படிமிசை நிகழ்ந்த தொல்லைப் பல்லவர் குலத்து வந்தார்
> கடிமதில் மூன்றுஞ் செற்ற கங்கைவார் சடையார் செய்ய
> அடிமலர் அன்றி வேறென் றறிவினிற் குறியா நீர்மைக்
> கொடிநெடுந் தானை மன்னர் கோக்கழற் சிங்கர் என்பார்."

என்று பிறசமயப் பற்றற்ற தீவிர சைவரென்று கூறியுள்ளார். எனவே தந்திவர்மன் வைணவனுகலின் இவனைச் சுந்தரர் சைவ நாயன்மாரோடு ஒப்பவைத்துக் கூருர். ஆதலால் இவன் கழற்சிங்கனன்மை அறியலாம்.

இஃதன்றியும் இவன் காலத்தில் இராட்டிரகூட மன்னன் "மூன்ரும் கோவிந்தன் (கி. பி. 803லும் பிறகு கி. பி. 808 —

---

* தமிழ்ப் பொழில் துணர் 3. பக்கம் 205.

810 வரையில்) பெரும் படையுடன்வந்து போரிட்டு (தந்தி வர்மனை) வென்று காஞ்சியைக் கைப்பற்றினன். தென்னாட்டு அரசர் அனைவரையும் வென்றான்; சோழ பாண்டிய நாடுகளை இராட்டிரகூடர் அளந்து திரிந்தனர்,"* என்று கூறுவதால் தந்திவர்மன் தன்னாட்டையும், தலைநகரையும் காக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆதலால் மூன்றாம் கோவிந்தனுடன் அவனுக்கு அடங்கியிருக்க விரும்பித்தான் ஓர் ஒப்பந்தம்செய்து கொண்டான் என்று கருதவேண்டி யிருக்கிறது. இவன் ஆட்சி யாண்டை நோக்க இது வலிவுகிறது. அஃதன்றியும் இவன் காலத்துப் பாண்டியனாகிய முதல் வரகுண பாண்டியன் (கி. பி. 800—830 வரை) பாண்டியநாட்டை யாண்டான். அவன் தகடூர் அதியனை கி. பி. 806-ல் எதிர்த்தபொழுது சேரனும் தந்திவர்வனும் அதியனுக்கு உதவினர். பாண்டியன் அவர்களை எல்லாம் வென்றான். பின்னும் படை பெருக்கி கி. பி. 816-ல் பல்லவனோடு பொருது பெண்ணையாறுவரை கைப்பற்றினன். இஃது அரைசூரில் போர்ப் பாசறையிலிருந்து அம்பாசமுத்திரப் பட்டய மளித்துள்ளதால் அறிகின்றோம். ஆதலால், தன் நாட்டின் பெரும்பகுதியைப் பாண்டியன் கவர்ந்து கொள்ளவும் தான் கோவிந்தனுக்கு அடங்கிநடக்கும் நிலையில் தந்திவர்மன் இருந்துள்ளான் என்பது தெளியலாம்.

சைவசமயத்தைப் பரப்பிய ஒழுக்கமுடைய சிறந்த நாயன் மார்களைக் கூறும் பதிகம் திருத்தொண்டத் தொகை என்பதாகும். அதில்,

"**கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற்சிங்கன்**"† என்று சுந்தரர் கூறியுள்ளார். வைணவனாகிய தந்திவர்மனை சுந்தரர் சிவனடியார் என்று கூறினர் என்றல் யாவருக்கும் நகைவிளைப்ப தொன்றாம். நாடிழந்து சில பகுதியையே சிற்றரசுபோல் பன்னாள் ஆண்டு வந்த பல்லவ மன்னனை "கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற," வேந்தர் என்று சுந்தரர் கூறியிருக்கமாட்டார். பேரரசரையன்றி சிற்றரசரை அவர் கூறுவதில்லை. இஃது அவர் மதுரைக்குச் சேரமானுடன்சென்று ஆண்டிருந்த சோழனும் பாண்டியனும் சூழத் திருப்பரங்குன்றம் இறைவனை வணங்கி யியற்றிய பதிகத்தில், "முடியால் உலகாண்ட மூவேந்தர்"‡ எனக் குறித்தாரன்றி பல்லவர்க்கு அடைகொடுத்தாற்போலத் தான் நெடிது வாழ்ந்த சோழநாட்டின் மன்னரைச் சிறிதும் குறிப்பிடவில்லை. சோழன் பாண்டியன் மகளை மணந்து

---

* South Indian Inscriptions Volume II Pages 63 - 69.

† சுந்தரர் தேவாரம் திருத்தொண்டத்தொகைப் பதிகம். பாடல் கூ.

‡ 　　,, 　　திருப்பரங்குன்றப் பதிகம். பாடல் கக.

மதுரையிலேயே தங்கியிருந்தமை கருதியே* சிறப்பித்துப் பாடவில்லை என்பது நனி விளங்கும். ஆகவே சுந்தரரால் சிறப்பித்துக் கூறப்பட்ட பல்லவன் பேரரசனுவன் என்பது தேற்றம். இவற்ருல் தந்திவர்மனன்று என்பதும் வேருெரு மன்னன் என்பதும் பெற்ரும்.

**மூன்ரும் நந்திவர்மன் கழற் சிங்கனு?**

இனி மற்ருெரு கருத்தினையும் ஆராய்வாம். இவன் தந்திவர்மனின் மகனுவன். தெள்ளாறெறிந்த நந்திவர்மன் எனப்படுவான். கி. பி. 825 முதல் 850 வரை யாண்டவன். இவனுக்கு **"அவனி நாராயணன்"** என்ற பெயரும் உண்டு. இவன் காலத்தில் காவேரிப்பாக்கம் என்னும் ஊர் "அவனி நாராயண சதுர்வேதி மங்கலம்" என்று பெயர் பெற்றிருந்தது. இவன் காலத்தில் சையாம் சென்றிருந்த ஒரு வணிகன் ஆண்டோர் குளந்தொட்டு அதற்கு "அவனி நாரணன்" என்று பெயரிட்டான் என்பதை அங்குள்ள கல்வெட்டொன்று கூறுகின்றது. ஆதலால், வைணவத் தந்தையோடு வாழ்ந்த போழ்து அவனி நாராயணன் என்ற பெயர் பெற்றிருந்திருக்க வேண்டும். முடிசூடிய பொழுது "நந்தி வர்மன்" எனப் பாட்டனது பெயரை அபிடேகப் பெயராகப் பெற்றிருக்கலாம்.† என்று எண்ணவேண்டி யிருக்கிறது. இவன் சைவப்பற்று மிக்கவன் ஆயினும் சமயப்பொறை யுடையவன். இவன் பல சிவன்கோயில்களுக்கு நிவந்தமளித்துள்ளான். திருவல்லம் கோயிலுக்கு மூன்று சிற்றூர்களைத் தானமாக அளித்து அங்குத் திருப்பதிகம் ஓதுவார் உள்ளிட்ட பல பணி செய்வார்க்கு 2000 காடி நெல்லும் 20 கழஞ்சு பொன்னும்

---

* "தென்னவர்கோன் மகளாரைத் திருவேட்டு முன்னரே
தொன்மதுரை நகரின்கண் இனிதிருந்த சோழனுர்
அன்னவர்க ளுடன்கூட வனையவருங் கூடி
மன்னுதிரு வாலவாய் மணிக்கோயில் வந்தடைந்தார்.

(பெ. பு. கழறிற். 92)

† 1. வெற்றிவேற் செழியன் என்னும் பாண்டியன் நன்மாறன் என்னும் அபிடேகப் பெயர் பெற்றுள்ளான். (பாண்டியர் வரலாறு பக். 14.)

2. முதல் இராச ராசனின் மகன் கங்கைகொண்ட சோழனுக்கு மதுராந்தன் என்பது இயற்பெயர். அபிடேகப் பெயர் இராசேந்திரன் என்பதாகும். (பிற்காலச் சோழர் சரித்திரம். பக். 139—140.)

3. இரண்டாம் பராந்தகன் என்பது இயற்பெயர். சுந்தரசோழன் என்பது அபிடேகப்பெயர். ஷை 70—71. இதுபோலவே நந்திவர்மனும் பெற்றிருந்தான் என்பது திண்ணம்.

தருமாறு செய்தனன்* இதனால், இவன் காலத்தில் கோவிலில் வழிபாடு நடக்கும் போழ்து மூவர் தேவாரம் என்று வழங்கப் படும் திருப்பதிகம் பாடப் பெற்று வந்ததாதல் வேண்டும். தமக்கு முன் இருந்தாரின் அருஞ் செயல்களையும் பாடல்களையும் அறிந்த பிறகுதான் உயர்ந்ததாகக் கருதி அதை மக்கள் போற்றுதல் செய்வர். கோயில்களில் அருள் பெற்ற சான்றோர் பாடல்களன்றிப் பிற பாடல் பாட அனுமதியார். தன் காலத்தில் ஒருவரின் ஒழுக்கத்தையும் அருஞ் செயல்களையும் அறிய முடியுமேனும் அவரைச் சிறந்த சிவனடியாராகவும் அருளாளராகவும் போற்றுவதென்பது பற்றிச் சிறிது சிந்திக்க வேண்டியிருக்கின்றது. எனினும் அவர்களது பாடலை அரன்முன்பாட அனுமதியார் என்பது மட்டில் உறுதி.

கழற்சிங்கனின் செயல்களையும் அதுபோன்ற செயல்களையும் செய்ய நந்தி வர்மனுக்கு வாய்ப்பிருந்ததா? என்பதையும் காண்பாம். கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் முதலாதிச் சோழன் கி. பி. 871—907. காலத்தில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி யருளிய திருத்தொண்டர் திருவந்தாதியில்,

"மாதவத் தோர்தங்கள் வைப்பினுக் காரூர் மணிக்குவைத்த
போதினைத் தான்மோந்த தேவிதன் மூக்கை அரியப்பொற்கை
காதிவைத் தன்றோ அரிவதென் றூங்கவன் கைதடிந்தான்
நாதமெய்த் தார்வண்டு கிண்டுபைங் கோதை கழற்சிங்கனே" (௬௪)

என்று கழற்சிங்க நாயனாரையும்,

"கழிநீள் கடல்நஞ் சயின்றார்க் கிருந்த கடிமலரை
மொழிநீள் புகழ்கழற் சிங்கன்றன் தேவிமுன் மோத்தலுமே
எழில்நீள் கழிமலர் மூக்கரிந் தான்என் றியம்புவரால்
செழுநீர் மருகனன் னாட்டமர் தஞ்சைச் செருத்துணையே" (௬௫)

என்று செருத்துணை நாயனாரைப் பற்றியும் கூறியுள்ளார். இதனால் கழற்சிங்கன் என்னும் பல்லவன் திருவாரூர் சென்று வழிபாடு செய்தான் என்பதும் அப்பொழுது ஆரூர் விடங்கனுக்கு அணிவிக்கக்கூடிய மலரில் ஒன்றை அவன் தேவி எடுத்து முகர்ந்தாள் என்பதும் அது காரணமாக செருத்துணை என்பவன் மாதேவியின் மூக்கரிந்தான் என்பதும் அதனை யறிந்த கழற்சிங்கன் முகர்தற்குமுன் மலரை எடுத்த முதற் குற்றம் செய்தது கையல்லவா என்று தன் மனைவியின் கையைத் தடிந்தான் என்பது பெரியபுராணப் பாடல்களாலும் நன்குவிளங்கு

* S. I. I. Vol. III. P. 93. இதுபோல் அரசனது வழிபாட்டிடம், மடம், கோயில் முதலியவற்றில் இறைவழிபாடு நடைபெறும்போழ்து திருப்பதிகம் பாடப்படுவது வழக்கம். இவைகள் S. I. I. Vol. VIII, No. 260, 675, 687 Ins. 129 of 1914 Ins. 349 of 1918 Ins. 139 of 1925 Ins. 99 of 1929. S. I. I. Vol. III; No. 151A. முதலியவற்றால் அறியலாம்.

கின்றன.* இத்தகைய செயல் செய்ய நந்திவர்மனுக்கு வாய்ப்பிருந்ததா? என்பதையும் கவனிப்பாம். இவனாட்சியில் பத்து ஆண்டுகள் வரையில் இவன்போரில் ஈடுபட்டிருந்தான். இதனால் பத்துஆண்டின் பின்னர் பெரும் வற்கடம் (பஞ்சம்) ஏற்பட்டது. அதைத் தீர்க்க வேண்டிய நிலையில் அரசன் பல ஆண்டுகள் உழைத்திருக்கவேண்டும் என்று அவனது வரலாறு விளம்புகிறது. ஆதலால் இவன் தலயாத்திரை செய்ய நல்ல வாய்ப்பில்லை. அன்றியும் நந்தி வர்மனுக்கு இரு மனைவியர் இருந்தனர். பாண்டியன் சீமாறன் சீவல்லபன் மகள் **அடிகள் கத்தன் மாறன் பாவை** என்பவளாவள். இவன் 75-ஆண்டுகள் உயிருடன் இருந்து பல சிவப் பணிகள் செய்துள்ள பெரும் சிவ பக்தி பூண்டவனாவன்.† மற்றொருவள்—நந்திவர்மனிடம் தோல்வியுற்ற இராட்டிரகூட மன்னன் அமோக வர்ஷ நிருபதுங்கன் மகளாகிய "**சங்கா**" என்பவளாவள். "இவள்" இலக்குமியின் அவதாரம் என்னலாம்; ஈன்ற தாயைப்போலக் குடிகளைப் பாதுகாத்தாள். அரசனது நற்பேறே இவளாகப் பிறப்பெடுத்து வந்ததுபோலும்! இவள் சிறந்த நுட்ப அறிவுடையவள். எல்லாக் கலைகளிலும் வல்லவள்"‡ என்று பாகூர் பட்டயம் பகர்கின்றது. இவள் எத்துணையாண்டு வாழ்ந்தாள் என்பது நன்கு தெரியவில்லை. முன்னவளே பல ஆண்டுகள் வாழ்ந்தவளாதலால் சிவபக்தி பூண்ட அவள் சிவாபராதச் செயலைச்செய்து அதற்காக அவளது கரமும் மூக்கும் வெட்டப்பட்டிருப்பின் அதனை அவள் பின்செய்த அறச்செயல் குறிக்கும் கல்வெட்டுகளிலும் பட்டயங்களிலும் வரையப்பட்டிருந்திருக்கும். அங்ஙனம் காணப்படாமையான் இவன்காலத்துத் திருவாரூர் நிகழ்ச்சி நடைபெறவில்லை என்பது உறுதி.

(தொடரும்)

---

*இன்னம்பர் என்னும் ஊரில் வாழ்ந்து வந்த இராமசாமி என்ற பொற்கொல்லன் நாள்தோறும் கோவிலின்முன் அமைந்துள்ள மொட்டைக் கோபுரத்திலுள்ள சிற்பத்திற்கு மாலை முதலிய தானே அணிவித்து வழிபடுவது பழக்கம். கோபுரத்தில் ஏறும்பொழுது அந்தச் சிற்பத்தைப் பிடித்தே ஏறவேண்டும். அவ்வாறு ஒருநாள் அதைப் பிடித்து ஏறும்பொழுது அச்சிற்பத்தின் வலது கையின் கட்டை விரலொன்று ஒடிந்துவிட்டது. அதைப் பொறாமல் ஆற்றாது உள்ளத்தனாய் தான் பெரும் பாதகம் செய்ததாக எண்ணினான். 40 வயதுக்குமேலிருக்கும் நிலைமையில் தன் குடும்பத்தைத் தான் தொழில் செய்தே காக்கவேண்டும் பொறுப்புள்ளவன் 1926ல் தனது வலதுகைக் கட்டைவிரலை வெட்டிப் பலிகொடுத்தான். அவன் சென்ற நான்காண்டுகளுக்கு முன்தான் இறந்துபோனான். இது போன்ற உள்ள முடையார் இக் காலத்திலும் இருக்கும் போழ்து, ஏன் அக் காலத்தில் கழற்சிங்கன் இதுபோல் செய்திருக்கக்கூடாது?

† Dr. C. Minakchis Ad. and. S. Life under the Pallavas. P. 161, 162. ‡ Epigraphica Indica, vol. XVIII, Pages 13.

# பண்டித, வித்துவான், சங்குப்புலவர்

[திரு. வித்துவான், சி. இராமசாமி, வத்தலக்குண்டு.]

**தோற்றுவாய்**

நமதருமைத் தாய்மொழியாம் தண்டமிழ் மொழியின் கண்ணுள்ள இலக்கிய இலக்கண நூல்களைத் தொல்லாணை நல்லாசிரியரை யணுகிப் பிற்றைநிலை முனியாது ஐயந்திரிபறக் கற்றும், கற்றவைகளை உள்ளத்தமைத்துப் போற்றும் நினைவாற்றலில் நிறைந்தும், அமயம் வாய்க்கும்போதெல்லாம் அந் நினைவாற்றலை வெளியிட்டும், செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்பொருளில் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய கவிதைகள் புனையும் வன்மை பெற்றும், பண்டைப் பனுவல்களிலே பொருள் காணப் பிறர் இடர்ப்படுகின்ற இடங்களிலெல்லாம் தமது நுண்மாண் நுழைபுலஞ் செலுத்திச் சிறப்புரை காணுஞ் சீர்மையுற்றும், ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோராய் வாழ்ந்த அரும் புலவர் வழித்தோன்றல்களுள் ஒருவரே, நம் சங்குப் புல்வர் ஆவர்.

**புலவரின் முன்னோர்**

இப்புலவரின் முன்னோர்கள் திருநெல்வேலி மாவட்டத்திலே "கரிவலம்வந்த நல்லூரை" யடுத்திலங்கும் "எட்டிசேரி" என்னும் சிற்றூரை இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்தனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெரும் புலமையாளராய்த் திகழ்ந்த இவர், தம் முன்னோராய சங்குப் புலவர் என்பாருக்கு பொன்னம்பலப்புலவர், திருமலைவேற்புலவர், ஆறுமுகப் புலவர் என்னும் மூன்று புதல்வர்கள் தோன்றினர். அவருள் நடுவினராகிய திருமலைவேற் புலவருக்கு ஆண்மக்களாப் பிறந்தோர் ஐவராவர். அவர் தாம் சங்குப்புலவர், இராமலிங்கப்புலவர், சீனிப்புலவர், சுந்தரப்புலவர், ஆறுமுகப் புலவர் என்னும் பெயரினர். இவ்வைவருள் முதல்வராகிய சங்குப்புலவரின் தனி மகனாராகிய திருமலைவேற் கவிராயர்தான் இன்றைய நம் சங்குப்புலவரின் இனிய தந்தையாராவர். இக் குடும்பத்தில் இவர் மட்டுமே கவிராயர் என அழைக்கப்பட்டனர். மேற்காட்டிய புலமையாளர்கள் யாவரும் செந்தமிழ்ப் புலவர்களாலும், குறுநிலமன்னர்களாலும் நன்கு பாராட்டப்பெற்றுச் சிறந்து விளங்கினர். இம்முன்னோருள் முதல்வராய்க் குறிக்கப்பட்ட சங்குப்புலவரின் செஞ்சொற் கவியாற்றலைத் தெரிக்கும் நிகழ்ச்சி யொன்றை ஈண்டுக் குறிக்கின்றேன். இது வழிவழியாகச் செவியாற் கேட்ட செய்தி என்று நம் புலவர் அவர்கள் கூற யானறிந்ததாகும்.

மலைசாயக் கவி பாடியது

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சேற்றூரை யாண்ட குறுநிலமன்னர் ஒருவர் சமயப்பற்றும் தமிழ்ப்பற்று முடையவராய் விளங்கினர். சேற்றூரையடுத்த "தேவதானம்" என்ற ஊரிற் கோயில் கொண்டுள்ள நச்சாடைலிங்கர்—பெற்ற நாயகியார்மீது தாங்கொண்ட பத்திமையின் காரணமாக ஆங் குள்ள கோயிலுக்கு முன்மண்டபம் ஒன்றைக் கட்டி முடிக்கக் கருதினர். அவ்வூருக்கு அண்மையில் நிலைபெற்று நின்ற மலை யொன்றன் உச்சியில் ஓர் பாறை படர்ந்து குறுநில மன்னரின் குறிக்கோளுக் கிலக்காகக் காட்சி தந்தது. "அந்தப் பாறை தரைக்குப் பக்கமாகத் தாழ்ந்திருந்ததால் எளிதாகக் கற்பணி புரிந்து கருதிய மண்டபத்தைக் கட்டி முடிக்கலாமல்லவா?" என்று ஏங்கி நின்றார் அரசர். அவ்வமயம் முதற் பெரும்புலவ ராய சங்குப்புலவர் அரசரைக்காண ஆங்குற்றார். அரசரும் தம்மை அணுகிய புலவரை அன்புடன் நோக்கி, "புலவீர்! தங்க ளின் திருந்திய செந்நாவின் கவிதைகள் சிறந்த ஆற்றல் படைத் தவை என்றும், பாடியவாறு பலிக்கும் பான்மையுடையனவென் றும் பலரும் பாராட்டிப் பேசக் கேள்வியுற்றிருக்கின்றேன். ஆதலின் தாங்கள் திருவுளம்பற்றி நிறைமொழி கொண்டு இம் மலை யுச்சியிலுள்ள பாறைப் பகுதி பெயர்ந்து சாய்ந்து தரையில் வந்து விழுமாறு ஓர் கவிதை பாட வேண்டுகின்றேன்," என்ற னர். புலவரும் அவ்வேண்டுகோளை, மறுக்க மனமின்றி "இயன்றவரை பாடுகின்றேன்," என இசைவு கூறி, அன்றிரவிற் கோயிலுக்குச் சென்று கடவுள் முன்னிலையிற் கவி யொன் றைப் பாடி, அதை ஓர் ஏட்டில் வரைந்து, சாயவேண்டிய பாறைப்பகுதியின் அடியில் வைத்து, மீண்டும் அக்கோயிலுக்கு வந்து உண்ணா நோன்புடன் படுத்துக் கொண்டார். மறுநாள் பொழுது புலருமுன், கடுங்காற்றும் பெருமழையுங் கலந்து சாடிப் படர்ந்திருந்த பாறையைப் பெயர்த்துத் தரைக்குக் கொண்டுவந்து சேர்த்தது. இதைக்கண்டு வியந்து பெரு மகிழ்வுகொண்ட மன்னர், புலவரை நோக்கி, "நாவலீர்! தாங் கள் விரும்பும் பரிசைக் குறிப்பிட்டால் வேண்டுவன செய்கின் றேன்!" எனக் கூறவும், புலவர் தமக்குப் பரிசு ஒன்றும் வேண் டாவென மறுத்துவிட்டனராம். இந்நிகழ்ச்சியைக் குறித்துச் சங்குப்புலவரின் மாணவர் ஒருவர் பாடியதாகவுள்ள பாடல் ஒன்று பின்வருமாறு :—

"பெற்றநா யகிபொற் கோயிற் பெருந்திருப் பணியின் வேலை
முற்றவே வேண்டி யாறு முகக்கவி ராயன் செம்பொற்
சிற்றடி மனத்துள் வைக்கும் திறற்சங்குக் கவிஞன் சேறை
நற்றனி மலையைத் தன்னால் நகரவே பாடி னனே."

**பிறப்பு**

இன்றைய நம் சங்குப் புலவரவர்கள் திருமலை வேற்கவிராயரின் அருமைப்புதல்வராக விஜயஆண்டு ஆவணித்திங்கள் ௧௭-ம் நாள் (31-8-1893) தோன்றினார்கள். இவருடன் பிறந்த ஆண்மக்கள் வேறு எவருமேயில்லை. பாக்கியலட்சுமி என்னும் பெயருள்ள பெண்மணியார் மட்டும் உடன்பிறந்த உரிமை பெற்று விளங்குகின்றார்.

**குடிபெயர்தல்**

சங்குப்புலவரவர்கட்கு வயது ஏழு நடக்கும்போது இவர் தந்தையார், எட்டிசேரியைவிட்டு நீங்கி, மதுரை மாவட்டத்தில், குறுநிலமன்னராட்சிக்குட்பட்ட "எறசக்கநாயக்கனூர்" என்னும் ஊரில், குடும்பத்துடன் குடியேறினார். இவருடன் வேறு சில குடும்பங்களும் ஆங்குற்றன. இக் குடும்பத்தினர் பல்வேறு தொழில்களை மேற்கொண்டு வாழ்க்கை நடத்திவந்தனர்.

**இளமைக் கல்வி**

எறசக்கநாயக்கனூரை யடுத்த "வாய்க்காற்பட்டி" என்னும் சிற்றூரில் தம் தாயுடன் பிறந்த அம்மான் ஒருவர் வைத்து நடத்திய திண்ணைப்பள்ளியில், நம் சங்குப்புலவர் 4-ஆம் வகுப்பு வரை கல்விகற்றார். பின்னர் சின்னமனூரிற் சில யாண்டுகள் தங்கி வாழச்சென்ற தம் தந்தையாரிடத்தில், தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை முறையாகப் பாடங் கேட்டுவந்தார். கற்கின்ற அனைத்தையும் கருத்திற் பதித்து நெட்டுருச்செய்வதில் நிகரற்று விளங்கினார். கவிதைகள் புனையும் ஆற்றலையுந் தம் தந்தையாரிடமே அடைந்தார்.

**முதல் திருமணம்**

தம் தந்தையாருடன் பிறந்த அத்தை மகளான "பொன்னழகி" என்னும் பெண்மணியை வாழ்க்கைத் துணைவியாக வரித்தார். அப்பொழுது இவருக்கு வயது பத்தொன்பது. கணவனும் மனைவியும் தனிக்குடித்தனம் நடத்தும்படியான சூழ்நிலை ஏற்பட்டது. வாழ்க்கைச்செலவுக்கு வருவாய்தேடப் பல தொழில்களை மேற்கொண்டார் புலவர். பலசரக்கு மளிகை வைத்தும், பலருடன் கூட்டுச்சேர்ந்து கூலவாணிகம் செய்தும், நிலத்தைக் குத்தகைக்குப்பிடித்து உழுதொழிலை மேற்கொண்டும் காலங்கடத்தினார். எனினும் வாழ்க்கையில் வளந்தோன்றவில்லை; இல்லறம் இன்னலோடுதான் இயன்றது. இவருடன் பத்தாண்டுகள் வரை மனைவாழ்வு பூண்டு மக்கள் பலரை ஈன்று இறுதியில் ஒரு பெண்மகவை மட்டும் உலகிடைவிடுத்து இவர்

துணைவியார் இயற்கை எய்தினர். மனைவியார் பிரிவும் தனி மகளைத்தாங்கும் பொறுப்பும் நம் புலவரைப் பெரிதும் வருத்தின. மனக்கவலைகள் மிகவே வாழ்க்கையில் ஒருவகை வெறுப்புந் தோன்றியது இவருக்கு. இந்த மனக்கவலைக்கு மருந்து யாது? வள்ளுவன் வாக்கு, உள்ளத்திற்கு எட்டியது. அதுதான்,

"தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது"

என்னுங் குறட்பாவின் செம்பொருளாகும். இதனை யகத்துட் கொண்ட நம் புலவர் அவர்கள் நாள்தோறும் பிள்ளையாரையும் கலைமகளையும் குறித்து வழிபாடு செய்துவந்தார்கள். அவ் வழிபாட்டின்போது பாடுவதற்கென 'விநாயகர் ஒருபா ஒருபஃது' என்ற நூலையும் 'சரசுவதி நாற்பா மூவினமாலை' என்ற நூலையும் பாடி முடித்தார்கள்.

**மதுரைத் தமிழ்ச்சங்கத் தொடர்பு**

இவ்வழிபாட்டின் வாயிலாக நம் புலவரின் வாழ்வில் வரவர ஓர் புது மலர்ச்சி காணப்பட்டது. மனஅமைதி நிலவியது. தாம் பாடிய சிறு நூல்களை அச்சிடுதற்கு எண்ணி மதுரை சென்றார்கள். ஆங்குள்ள தமிழ்ச் சங்கத்தை அடைந்து அச் சங்க மாணவர் சிலருடன் அளவளாவினர்கள். அதன் பயனாக அவருக்குச் சங்கத் தேர்வில் கலந்து தானும் எழுதவேண்டு மென்ற ஆர்வம் பிறந்தது. தேர்வுக்குரிய நூல்களுடன் தம் சொந்தவூர் மீண்டார்கள். முயன்று பயின்று அவ் யாண்டில் நடைபெற்ற "பால பண்டித"த் தேர்வுக்குச் சென்று எழுதி, முதல்வராகத் தேறி, எழுபது வெண்பொற்காசுகள் மதிப்புள்ள "பொற்பதக்கம்" ஒன்றைப் பரிசாகப் பெற்றார்கள். இங்ஙனமே அடுத்துவந்த பண்டிதத் தேர்விலும் முதன்மையாகத் தேறி, அக்காலம் நூறு வெண்பொற்காசுகள் பெறுமானமுள்ள "தங்கத்தோடா" ஒன்றைப் பரிசாகப் பெற்றார்கள். இதனால் மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர்களாலும் ஏனைய மாணவர்களாலும் இவர்கள் நன்கு மதிக்கப்பெற்றார்கள். பாலபண்டிதத் தேர்வுக்குரிய பொற்பதக்கத்தை திரு. தினகரசேதுபதி அவர்களும் பண்டிதத் தேர்வுக்குரிய "தோடாவை" ஓய்வுபெற்ற கவர்னராகிய திரு. "மார்ஞரிபாங்க்" என்ற துரைமகனாரும் தலைமைதாங்கிப் பாராட்டிக்கூறி இப் புலவரவர்கட்கு வழங்கினார்கள். இங்ஙனம் புலமையுற்ற பின்னர், அண்ணாமலை நகரின்கண் இருந்த பண்டிதப் பயிற்சிக்குரிய கல்லூரியிற் சேர்ந்து ஓராண்டுக்காலம் பயின்று அத்தேர்வையும் முடித்துத் திரும்பினார்கள்.

**இரண்டாவது மணம்**

நம் புலவரவர்கட்கு இரண்டாந் திருமணம் நடக்கும்போது வயது முப்பத்தொன்று. தம்முடன் பிறந்த தமக்கையின் புதல்வி "மாணிக்கமணி" என்னும் மங்கையர் திலகத்தை மணந்துகொண்டார்கள். அவ்வம்மையாரின் வயிற்றிலே ஆண் மக்கள் இருவரும் பெண்மக்கள் ஐவரும் தோன்றினர். "குல விச்சை கல்லாமற் பாகம் படும்" என்பதற்கிணங்க இம்மக்கள் கல்வியில் நலம்பெற்று வளர்கின்றனர்.

**தமிழாசிரியர் பணி**

பண்டிதப் பயிற்சி நிறைவெய்தி மீண்டு, மறுமணமும் நிகழ்ந்த பின்னர் செட்டிநாட்டின்கண்ணுள்ள பள்ளத்தூரிலும் மதுரை மாவட்டத்தைச் சார்ந்த சோழவந்தான், மேலூர் ஆகிய விடங்களிலும் தமிழாசிரியராகப் பணியாற்றிப் பின்பு தம்மூருக் கருகிலுள்ள உத்தமபாளையம் உயர்நிலைப்பள்ளியின் நிலையான தமிழாசிரியராகப் பணியேற்றார்கள். இவ்வூரிற் பதினெட்டு யாண்டுகள் பணியாற்றி ஊர் மக்கள், ஆசிரியர்கள், மாணவர் கள் ஆகிய அனைவரும் பாராட்டுஞ் சிறப்புப்பெற்று இறுதியில் இவ்வூரினின்றே ஓய்வுபெற்றார்கள்.

**ஆயிரம் வெண்பொற்காசுகள் பரிசு**

உத்தமபாளையத்தில் தமிழாசிரியர் பணியை ஒப்புக் கொண்டபிறகு சென்னைப் பல்கலைக் கழகத்தார் நடாத்தும் தனித் தமிழ் வித்துவான் தேர்விலும் கலந்து எழுதவேண்டு மென்ற எண்ணம் பிறந்தது. அவ்வாறே பயின்று 1936-இல் நடைபெற்ற சென்னைப் பல்கலைக் கழகத் தனித்தமிழ் வித்து வான் (T. D.) தேர்வில் மண்டல முதல்வராய்த் தேறி திருப் பனந்தாள் மடத்துப் பரிசாகிய ஆயிரம் வெண்பொற்காசுகளை யும் அடைந்தார்கள். சென்னையில் டாக்டர் உ. வே. சாமிநா தய்யர் அவர்களின் தலைமையில் நடந்த பாராட்டுக் கூட்டத்தில் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் இலக்குமணசாமி முத லியாரவர்கள் இவர்களைப் பாராட்டிப் பரிசுப் பணமுடிப்பை வழங்க அதனை ஏற்றார்கள்.

**மடத்தின் மரியாதை**

திருப்பனந்தாள் மடத்தின் பரிசாகிய ஆயிரம்வெண்பொற் காசுகளையும் பெற்ற நம் புலவர் அவர்கள், அம்மடத்தின் தலைவ ராய் இலங்கிய உயர்திரு. சாமிநாதத் தம்பிரான் அவர்களைக் காணச் சென்றபோது, அத்தம்பிரான் அவர்கள் நம் புலவரை நன்கு வரவேற்றுப் போற்றி அளவளாவியிருந்து "சகலகலா

வல்லிமாலை" என்னும் நூல்வரைந்த செப்பேடுகளை ஒரு பட்டாடையிற் பொதிந்து சுற்றிப் பரிசாக வழங்கிச் சிறப்புச் செய்து அனுப்பினார்கள்.

**புலவரைப் போற்றிய புரவலர்**

செட்டிநாட்டைச் சார்ந்த பள்ளத்தூர்ப் பெருஞ் செல்வராம் திரு. அ. மு. ப. அ. மு. முருகப்பச் செட்டியார் அவர்கள் நம் புலவரின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் துணையாக இருந்தார்கள். புலவருக்கு உற்றுழியுதவியும், வித்துவான் தேர்வுக்குச் செல்லும்படி அடிக்கடி தூண்டியும், அத்தேர்வில் வேறொருவருக்குப் பரிசு கிடைக்கப்போகிறது என்று கேள்வியுற்று ஐயங்கொண்டவராய் இவர் எழுதிய விடைத்தாள்களை மீண்டும் எடுத்துப் பார்த்து அவைகளில் கூட்டாது விடப்பட்ட மார்க்குகளைக் கூட்டிப்போடச்செய்து பரிசுக்குரிய முதன்மையாளர் சங்குப்புலவரே என்பதை நிறுவிப் பரிசு கிடைக்குமாறு செய்தும் இவர்களைப் புரந்துவந்தார்கள் என்னலாம்.

**நினைவாற்றலும் புலமையாற்றலும்**

நம் புலவரவர்கள் இளமைக்கல்வி பயின்ற காலங்களிலும் சங்கத் தேர்வு பல்கலைக் கழகத் தேர்வுகட்குப் பயின்ற காலங்களிலும் கற்ற பகுதிகளை நெட்டுருச்செய்து கருத்தில் ஏற்றும் சிறந்த ஆற்றலைக் கொண்டிருந்தார்கள். எந்த நூலில் எந்தப் பகுதியைக் கேட்பினும் சிறிதும் தடையின்றி அந்தப் பகுதியை ஒப்புவிப்பார்கள். பண்டிதத் தேர்வில் கல்வெட்டுத் தொடர்பாகக் கேட்கப்பட்ட வெண்பா வினாவிற்கு வேறு எவரும் எழுதாமல் விட்டுவிட, இவர்கள் ஒருவரே நன்கு விடை வரைந்திருந்தமையை நோக்கி, அக்காலம் தேர்வாளராக இருந்த விபுலானந்த அடிகள் இவர்களைப் பாராட்டினர் என்று கூறக் கேட்டிருக்கின்றேன். நினைவாற்றல் மட்டுமின்றி நூல்களுள் நுழைந்து செல்லும் நுண்ணிய அறிவாற்றலும் பெற்றவர்கள். 'யமகம்' 'திரிபு' 'சிலேடை' 'மடக்கு'ப் போன்ற பொருள்காண்டற்கரிய செய்யுட்களையும் பிரித்துப் பொருள் உரைக்கும் புலமை நலமுடையவர்கள். அத்தகைய கவிதைகளைத் தாமியற்றும் ஆற்றலும் உடையவர்கள். காதற்சுவை நிரம்பிய கவிதைப் பகுதிகளை நூல்களின் துணையின்றி நாட்கணக்கில் இவர்களிடம் கேட்டுக் கொண்டிருக்கலாம். உத்தமபாளையத்தில் தொடங்கப்பட்ட "தமிழ் இலக்கிய மன்றத்"தின் துணைத் தலைவராயும், மன்றத்தின் ஆசிரியராயுமிருந்து பல இலக்கிய நூல்களை மன்ற மாணவர்க்கு விரித்துரைத்துப் பாடஞ் சொன்னார்கள். உயர்நிலைப் பள்ளியில் இவரிடம் தமிழ்பயின்ற மாணவர்கள் பலர், உயர்தரக்

கல்லூரிகளில் தமிழிற் சிறந்தவர்களாக விளங்கினர்கள். இப்புலவரால் இயற்றப்பட்டு அச்சியற்றப்பட்ட நூல்கள்:—"விநாயகர் ஒருபா ஒருபஃது", "சரசுவதி நாற்பா மூவினமாலை" என்பன. அச்சேருதவை:—"கருவைச் சிலேடைப் பதிகம்", "மதுரைச் சிலேடை வெண்பா", "மாணவர் இலக்கணம்" (நூற்பாவானியன்றது) என்பன.

**நற்பண்புகள்**

புலமைக் குன்ருய்த் திகழும் இவர்கள் எவராலும் பழகுதற்கேற்ற இனிமையும் எளிமையும் உடையவர்கள். குழந்தையுள்ளங்கொண்டவர்கள். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசா உயர் நெறியுடையவர்கள். தன்னை நாடி வருவார்க்குக் கனிந்த சொற்களால் நல்வரவு கூறிப் பேணியனுப்பும் பெருங்குணம் படைத்தவர்கள். எச்சமயத்தும் எந்த நூலிலும் எவர் எத்தகைய ஐயத்துடன் வந்து எதை வினவினும் சிறிதும் முகங்கோணுமல் முனிவு கொள்ளாமல் இன்முகங் காட்டி நன்சொல் வழங்கிப் பொருள் விளக்கிப் போகவிடுக்கும் நற்பண்பு வாய்ந்தவர்கள்.

> "இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
> துன்பம் உறுத லிலன்".

என்ற குறட் கருத்திற்கிணங்க இன்ப துன்பங்களை இணையாகக் கருதும் இயல்புடையவர்கள். பிறர் இன்புறக் கண்டவழி இன்புறுதலும் துன்புறக்கண்ட வழித் துன்புறுதலுமாய தூய நெகிழ்ந்த உள்ளம் படைத்தவர்கள். இலக்கிய உரையாடல் நிகழ்த்தும்போது சுவையான பகுதிகளை எடுத்துக்காட்டிப் பிறரை நகைக்கவைத்துத் தாமும் குலுங்கக் குலுங்க நகைத்து மகிழும் மாண்புடையவர்கள். ஒரு கருத்துமாற்றங் குறித்து மற்றவரிடம் சொல்லாடுகின்ற வழிச் சலியாது பேசும் நாவீறுடையவர்கள். எத்தகு பெரிய மனிதராயினும் அவரின் செயல் தவறுடையதாயின் அம்மனிதரின் செல்வாக்கிற்கு அஞ்சாது எதிர்நின்று அவரைத் தெருட்டுவதில் பண்டைத் தமிழ்ப் புலவரான கோவூர் கிழாரனைய திண்மை படைத்தவர்கள். வைகறையில் படுக்கை விட்டெழுந்து, முல்லையாற்றில் மூழ்கிக் குளித்து, கடவுள் வழிபாட்டை முடித்துக் கடமைகளை மேற்கொள்வதில் வழுவாத பழக்கமுடையவர்கள். மறந்தும் பிறன்கேடு சூழாத மாண்புடையவர்கள். தன்னைப்போல் பிறரையுங் கருதிப் பேணும் பேரன்புடையவர்கள். புலமை நிறைவோடு புரவலப் பண்பும் பூண்டவர்கள். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளலும் உரைத்தலும், உஞற்றுதலுமாகிய, மன, மொழி, மெய்களின்

வழிக் குற்றம் நிகழாவாறு காக்கும் குறிப்புடையவர்கள். ஐம்பத்தெட்டாண்டுகள் நிறைந்தும் தளரா முயற்சியும் சலியா உழைப்புமுடையவர்கள். இவற்றிற்கேற்ற உள்ளக் கிளர்ச்சியும் உடலுரனும் வாய்க்கப்பெற்றவர்கள். யான் இவர்களுடன் பழகிய பத்தாண்டுகட்குள் கண்ட நற்பண்புகள் இன்னும் பலவுண்டு. ஆயின் இவர்களிடம் யான் காணுதது ஒன்றே ஒன்றுதான்! அதுதான் "புலமைத் தருக்கு" என்னும் பொல்லாத குணம். ஒய்வு பெற்றுள்ள இவர்கள் உத்தமபாளையத்தில் குடும்பத்துடன் வாழ்ந்தாலும் தமிழன்னை அங்ஙனம் ஒய்வு பெறுமாறு விடவில்லை. கம்பம் யூனியன் உயர்நிலைப்பள்ளி (ஏல விவசாய சங்கத்தார் நடத்தும் பள்ளி) தனக்குத் தொண்டு புரியுமாறு பணிக்க நாள்தோறும் ஆங்குச் சென்று தமிழாசிரியராய்ப் பணியாற்றி வருகின்ருர்கள். இவர்கள், தம் குடும்பத்துடன் இன்னும் பல்லாண்டுகள் நிலவி இவ்வுலகில் தமிழ்த் தொண்டாற்ற எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் சுரப்பானுக!

"நல்லார் குணங்க ளுரைப்பதுவும் நன்றே."

---

## சிலம்பு

தமிழர் செல்வங்களுள் சிலம்பு என்னும் சிலப்பதிகாரமும் ஒன்று. இது தண்டமிழ்ப் பெருங்காப்பியங்களுள் ஒன்ருய் அறம், பொருள், இன்பங்களை வடித்துக்கூறும் வற்ருவளம் மிக்குடையது. சிலம்பைச் செல்வம்படைத்த பெண்ணணங்கார் இன்றும் அணிகின்றனர்; அன்றும் அணிந்தனர்; ஆனல், அன்று கண்ணகியார் தம் காலிலணிந்த செம்பொற் சிலம்பு இளங்கோ வாயாற் புகழும் பெருமைபெற்று, அது காரணமாக அறத்தையும் கற்புநெறியையும் ஊழ்வலியையும் காட்டி, என்றுமுள தென்றமிழ் மொழியைச் சிறப்பித்து நிற்கின்றதென்ருல், அதன் சிறப்பை யாரே அளப்பிட்டுரைக்க வல்லுநர்! இதனைத் தமிழராகிய நாம் போற்றிக் கற்று அதன் சுவையை நுகரும் கடப்பாடுடையோம். அதன் சொல்லோவியமும் பொருள்அழகும் எம்மால் கட்டுரைக்கும் தன்மையனவோ!

'மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!'

என்பன, ஒரு சில ஓவியங்கள். அதிற்படிக! மூழ்குக! மூழ்குக!

—செல்லூர்க்கிழார்.

---

# சங்க இலக்கியங்களில் இல்லையா ?

[திரு. சு. குமாரஸ்வாமி ஆச்சாரி, M. A., மயிலம்]

(சிலம்பு உ௫, பரல் கக, ௫கஉ ஆம் பக்கத் தொடர்ச்சி)

10. எனின், காதலராவார் இருவர்க்கும் (நிறுத்த காம வாயில்) அன்பு இன்றியமையாததொன்றன்றோ? உலகில் பெரு வழக்காகிய அறனிலை, ஒப்பு, பொருள்கோள், தெய்வம் ஆகிய நால்வகை மணத்திலும் மணம் புணர்க்கும் பெரியோர்க்கு மன இசைவு உண்டேயன்றி மணம் புணரும் தலைவன், தலைவியாகிய இருவர் மாட்டும் ஒத்த அன்பு இருக்குமெனக் கருதுவது இயலாததாகலின் தாமே ஒத்துப்புணரும் காமக் கூட்டம் சிறந்த தன்றோ? சிறந்த முறையைத்தானே பின்பற்ற வேண்டும்? என்ற வினாவெழும்.

**காமக்கூட்டம்:**—களவின்வழி வந்து கற்பு நிலையில் வாழ் வது—சிறந்ததொன்றே என்பது யாவர்க்குமுடம்பாடே. "அகத்திணையாவது அறத்தின் வழாமலும் பொருளின் வழா மலும் இன்பத்தின் வழாமலும் இயலல் வேண்டும். அவையெல் லாம் பிறர்க்குக் குற்றேவல் செய்வார்க்குச் செய்தல் அரிதாக லானும், அவர் நாணுக் குறைபாடுடையராகலானும், இன்பம் இனிது நடத்துவார் பிறரேவல் செய்யாதார் என்பதனானும் இவர் புறப்பொருட் குரியவரானர் என்க" என "அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும்" என்னும் தொடர்க்கு உரை கூறும் இளம்பூரணர் கூறுவர். இதனால் காமக்கூட்டம் நன் னிலையில் அமைவது அரிது என்பது போதரும்.

'காமக் கூட்டத்திற்குக் காமவாயிலாகிய அன்பு மாத்திரம் போதாதோ? ஏனையவையும் ஒத்திருத்தல் வேண்டுமோ?' என வினாவெழலாம். ஒப்புவகை பத்தினுள்ளும் இடையில் வைக்கப்பட்டனவாகிய உருவும் நிறுத்த காமவாயிலும் இன்றி யமையாதனவே. அவ்விரண்டனுள்ளும் காமவாயில் இன்றி யமையாததாம். எனினும், அவ்வாறு கூடியோர் இல்லற வாழ்க்கையைத் திறம்பட நடத்த ஆண்மையும் உணர்வும் திரு வும் நிறையும் வேண்டற்பாலன அன்றோ? எனவே, காதலர் இவைகளையும் உடையராதலால் வேண்டுவது இன்றியமையாத தாம். தாமே எதிர்ப்பட்டுத் தமரை மறைத்துக் காமக்கூட்டம் விழைவார் அன்பு ஒன்றையே நாடுவரன்றி ஏனையவை களை நாடுவரோ? யாவரும் நாடுவர் என விடையிறுத்தலொல் லாது. தொல்காப்பியனார் மெய்ப்பாட்டியலுள், 'தலைவி தலை வனைக் கண்டவிடத்துப் புகுமுகம் புரிந்து, பொறிநுதல்

வியர்த்து, நகுநயம் மறைத்து, சிதைவு பிறர்க்குணர்த்தாது, கூழை விரித்தும், காதொன்று களைந்தும், ஊழணி தைவந்தும், உடை பெயர்த்துடுத்தும், அல்குல்தைவந்தும், தன் இல் வலியுறுத்தியும், இருகையுமெடுத்தும், பாராட்டெடுத்தும், மடந்தபவுரைத்தும், ஈரமில் கூற்றமேற்றிலர் நாணியும், தலைவன் கொடுப்பவை கொண்டு தெரிந்தும் படுவள் எனக் கூறுதலால் தலைவி ஆராய்ந்தல்லது புணர்ச்சிக்கு உடம்படாள் என்பது போதரும். இவ்வாறு ஆராய்ந்து காதலனைக் கொள்வதென்னும் வழக்கம் மகளிர் யாவர்க்குமுண்டெனின் அடிக்கடி விவாகரத்து (Divorce) ஏற்படுவதும், இன்பமில்லாது இல்லற வாழ்க்கை நடத்துவதும் நாட்டில் இருக்கவேண்டியதில்லையன்றோ? உலகில் அவ்வாறு நிகழக் காண்டலால் காதலர் நிலையினராக இல்லை என்பது தாமே போதரும். விவாகரத்து ஏற்படுவதற்குக் காரணம் தலைமக்களுக்கு ஆகா என விலக்கப்பட்ட நிம்பிரி முதலிய பத்துமேயாம். தொல்காப்பியத்து மெய்ப்பாட்டியலுள் கூறப்பட்ட ஒப்புமைகளையுடையராகக் காணப்படினும் பெரிய செல்வந்தர் வீட்டில் பிறந்து தமக்கொத்த பெருமையுடையோர் வீட்டில் வாழ்க்கைப்பட்ட மகளிருள்ளும் சிலர் தம் கணவரை விட்டுப் பிறரை நாடிச் செல்கின்றனரே. இதற்குக் காரணமென்னோ? 'அறநெறியில் வழுவாது வாழவேண்டும்' என்னும் எண்ணமுடையவர் தவிர ஏனைய மகளிர் காதலரது ஆண்மை, உணர்வு, திரு முதலியவற்றைப் பெரிதும் விழையாது காமமொன்றையே விழைவர். காமமென்பது மெய்யுறு புணர்ச்சி விழைதலாம். காமமென்பது இப்பொருள் படுமென்பதனை

"காமத்திற் செம்பாக மன்று" "காமத்துக் காழில் கனி"

என்னும் திருக்குறள் தொடர்களுக்குப் பரிமேலழகர் கூறும் பொருள் கொண்டுணர்க.

"வேட்டோர்க்கு அமிழ்தத்தன்ன கமழ்தார் மார்பின்
வண்டிடைப் படாஅ முயக்கமும் தண்டாக்காதலும்
தலைநாட் போன்மே"

எனத் தலைமகள் தோழிக்குக் கூறுவதாகவும்,

"அலங்கு மழைபொழிந்த அகன்க ணருவி
ஆடுகழை யடுக்கத் திழிதரு நாடன்
பெருவரை யன்ன திருவிறல் வியன்மார்பு
முயங்காது கழிந்த நாளிவள்
மயங்கிதழ் மழைக்கண் கலிழு மன்னாய்"

எனத் தோழி செவிலிக்குக் கூறியதாகவும் கபிலர் (அகம் 332, ஐங்கு 220) கூறுகின்றார். உலோச்சனார்,

"அரையுற் றறைந்த ஆரம் நீவிப்
புரையப் பூண்ட கோதை மார்பினை
நல்லகம் வடுக்கொள முயங்கிநீ வந்து
எல்லினிற் பெயர்தல் எமக்குமா ரினிதே" (அகம் 100)

எனத் தோழி கூறியதாகக் கூறுகின்றார். அகம் 58ல்,

"வனைந்துவர லிளமுலை ஞெமுங்கப் பல்லூழ்
விளங்குதொடி முன்கை வளைந்து புறஞ்சுற்ற
நின்மார் படைதலி னினிதா கின்றே"

எனத் தலைவி தலைவனுக்குக் கூறியதாக இளந்தேவனார் கூறுகின்றார்.

"தலைவனொ டொருநாள், நக்குவிளை யாடலும்
கடிந்தன்று, ஐதே கம்ம மெய்தோய் நட்பே" (குறு. 401)

எனத் தலைவி தானே கூறிக்கொண்டதாக அம்மூவனார் கூறுகின்றார். இளங்கீரனார்,

"அணிவளை முன்கை ஆயிதழ் மடந்தை
வார்முலை முற்றத்து நூலிடை விலங்கினும்
கவவுப் புலந்துறையுங் கழிபெருங் காமத்து
இன்புறு நுகர்ச்சியிற் சிறந்ததொன் றில்லெனை
அன்பால் மொழிந்த என்மொழி கொள்வாய்"

எனத் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறியதாக (அகம்........)க் கூறுகின்றார்.

"எரிகவர்ந் துண்ட என்றூழ் நீளிடை
அரிய வாயினு மெளிய வன்றே
அவவுறு நெஞ்சங் கவவு நனிவிரும்பிக்
கடுமான் றிண்டேர் கடைஇ
நெடுமா ணேக்கிநின் றுள்ளியாம் வரவே"

எனத் தலைவன் தலைவிக்குக் கூறியதாக ஓதலாந்தையார் (ஐங்கு—360) கூறுகின்றார். பரிமேலழகர் திருக்குறளில் "கலந்துணர்த்துங் காதலர்க் கண்டால்" என்னுந் தொடர்க்கு "அப்புலவியைக்கலவி தன்னானே நீக்கவல்ல காதலரைக் கண்டால்" என்று பொருள் கூறுகின்றார். இளம் புல்லூர் காவிதியார் அகம் 328-ல்

"இரவின் வந்தெம் மிடைமுலை முயங்கித்
துனிகண் அகல வளைஇக் கங்குலின்
இனிதி னியைந்த நண்பவர் முனிதல்
தெற்று குதல்நற் கறிந்தன மாயின்
இலங்குவளை நெகிழப் பரந்துபடர் அலைப்பயாம்
முயங்குதொறு முயங்குதொறு முயங்க முகந்துகொண்
டடக்குவ மன்னோ தோழி......
.........................................
சாரல் நாடன் சாயல் மார்பே"

எனத் தலைவி கூறியதாகக் கூறுகின்றார். இத்தகைய இலக்கியச் சான்றுகள் இன்னும் பலவாம். இச் சான்றுகளால் நாமறிவன : காதலர் விரும்புவது மெய்யுறுபுணர்ச்சியையே என்பதும், புலவியை மாற்றும் படை கலவியே என்பதுமாம். ஆண் பெண்ணாகிய இளைஞர் இருவர் ஒன்றுசேர்ந்து வாழவிரும்புவதற்குக் காரணம் மெய்யுறு புணர்ச்சியே என்பதனைக் களவொழுக்கத்து வகைகள் நான்கனுள் முதலாவது இயற்கைப் புணர்ச்சி எனவும் அதன் துறைகளுள் கூடுதலுறுதல், புணர்ந்துழி மகிழ்தல் எனவும் கூறும் தொல்காப்பிய முதலிய இலக்கணங்களே நன்கு வலியுறுத்தும். தமக்கு முந்திப் போகம்விடும் ஆடவரை மகளிர் விரும்பார் என்பது உலகில் இயல்பன்றோ?

காமத்தொடு கூடிய காதல்வாழ்க்கை வளம்படவேண்டின் இருவரும் திரு, நிறை, உணர்வு, அருள் உடையராதல் வேண்டும். திருவொடும் அருளொடும் வாழவேண்டுமாயின் ஆண்மை (முயற்சி) இருவர்க்கும் இன்றியமையாததாம். இருவரும் ஒரே விதமான ஒழுக்கமுடையவராதல் வேண்டும் என்பது வெளிப்படையாம். இருவர்க்கும் ஆண்டினும் ஒப்புமை வேண்டும் என்பர் தொல்காப்பியர். இருவரும் ஒத்தவயதுடையராதல் வேண்டும் என்றவுடனே ஆணுக்கு வயது பதினெட்டாயின் பெண்ணுக்கும் வயது பதினெட்டாகவேண்டும் என்பது கருத்தன்று. இருவர்க்கும் முறையே ஆண்மையும் பெண்மையும் தோன்றிய நிலையில் ஆண்டொப்புமைவேண்டும். நம் இலக்கண இலக்கியங்கள் ஆண் மகனுக்கு ஆண்மை தோன்றும் பருவம் பதினாறென்றும் பெண்ணுக்குப் பெண்மை தோன்றும் பருவம் பன்னிரண்டென்றும் கூறுகின்றன. ஆதலின், பதினாறாண்டு நிரம்பிய ஆடவனுக்குப் பன்னிரண்டாண்டு நிரம்பிய பெண்ணைத்தான் மணம் புணர்த்தல்வேண்டும் என்பது பண்டையோர் வழக்கமாகத் திகழ்ந்தது, திகழ்கிறது. பதினாறாண்டு நிரம்பியவனுக்குப் பதினைந்தாண்டு நிரம்பியவளை மணம் புணர்க்கலாகாதோவெனின் ஆகாது; ஆண்மை தோன்றும் நிலையிலுள்ளவனுக்குப் பெண்மை தோன்றி நான்காண்டுகளான — பெண்மையுறுப்புக்கள் வலிவடையப்பெற்ற — ஓர் தையலை மணம் புணர்ப்பின் ஆணைவிடப் பெண்ணுக்குக் காமம் அதிகமாக இருக்கும். ஆதலின், இந்நிலை மீறின் அவர்களின் உடல்நிலை கெடும். ஆணைவிடப் பெண் வயதில் மூத்தவளாக இருக்கக்கூடாது என்பதற்கும் காரணம் இதுவேயாம். ஆதலின் இருவர்க்கும் ஆண்மை பெண்மை தோன்றிய நிலையில் ஆண்டொப்புமை வேண்டும் என்பதே முந்தையோர் மரபென்பது வெள்ளிடைமலையாம்.

வாழ்க்கைத்துணைத் தேர்வில் பிறப்பு நோக்குதல்வேண்டும் என்பார் தொல்காப்பியர். பிறப்பு என்னும் சொல் உரையாசிரியர்கள் கொள்கையின்படி சாதி எனப் பொருள்படும். ஆயினும் அச் சொற்குப் பல வேறு பொருள் காண்கின்றனர். சிலர் அப்பொருள் பொருந்துமா? என ஆய்வது ஈண்டு நோக்கமன்று. ஆதலின் பிறப்பு (சாதி) நோக்கப்படவேண்டுமென்பது உண்மைதானா என ஆய்வோம்.

காம சாத்திரங்கள் உடலமைப்பையும், அறிவு நிலையையும் கருதி, மகளிரைப் பத்மினி, சித்தினி, சங்கினி, அத்தினி என நால்வகையாகவும், ஆடவரை முயல், மான், எருது, குதிரை என நால்வகையாகவும் வகுத்துக் கூறுகின்றன. ஆட்வர் மகளிர் கூட்டுறவால் தோன்றும் புதல்வர் நிலையைப்பற்றி இரதிசாஸ்திரம் ஒன்பதாம் பகுதி கூறுகின்றது. அஃதாவது: "பத்மினிப் பெண்ணுக்கும் முயல் வகுப்பு ஆடவனுக்கும் தோன்றிய மகவு ஆணாயின் தெய்வபக்தியுடையதாயும்; பெண்ணாயின் பதிபக்தியும் தெய்வபக்தியும் உடையதாயுமிருக்கும். சித்தினிப் பெண்ணுக்கும் மான் வகுப்பு ஆணுக்கும் பிறக்கும் மகவு ஆணாயின் அழகும் உடல்வன்மையும் உடையதாகும்; பெண்ணாயின் வித்யாதரியைப்போலும் அழகுடையவளாவாள். சங்கினிப் பெண்ணுக்கும் எருது வகுப்பு ஆடவனுக்கும் பிறக்கும் மகவு ஆணாயின் உடல் வன்மையும் சிறந்த அறிவும் உடையதாகும்; பெண்ணாயின் இடாகினியைப்போல் விளங்கும். தன் கணவனை விட்டுப் பிறரை விரும்பும். அத்தினிப் பெண்ணுக்கும் குதிரை வகுப்பு ஆடவனுக்கும் பிறக்கும் மகவு ஆணாயின் மிக்க உடல் வன்மையொடுகூடிய போர் வீரனாகும்; தரை, நீர், நெருப்பு, காடு ஆகிய எல்லாவிடத்திலும் எதிரியைத் தாக்கும் வன்மையுடைய வீரனாகும்; பெண்ணாயின் எப்பொழுதும் ஆண்கூட்டத்தையே விரும்புகின்ற காம விகாரமுடையதாகும், காமாந்தகாரம் சிறந்திருக்கும். இதுவரையிற் கூறிய பகுதி மேற்கூறியபடி வகுக்கப்பெற்ற பொருத்தமுடைய ஆடவர் மகளிருக்குப் பிறக்கும் மகவு நிலையாம். இனி ஆடவர் மகளிருக்குள் பொருத்தமில்லாத நிலையிற் பிறக்கும் மக்கள் நிலை கூறப்படும்.

"அத்தினிப் பெண்ணுக்கும் முயல் வகுப்பு ஆடவருக்கும் பிறக்கும் மகவு ஆணாயினும் பெண்ணாயினும் அழகாயிருக்கும்; ஆயினும் நரம்பு பலக்குறைவு உடையதாகவும் குறைந்த வாழ்நாளுடையதாகவும் ஆகும்; பெண்ணாயின் ஆறு மாதத்திற்குள் இறந்துபடும். அத்தினிப்பெண் இந்த வகுப்பு ஆடவருடைய கூட்டுறவினால் திருப்தியடையமாட்டாள். சங்கினிப் பெண்ணுக்கும் முயல் வகுப்பு ஆடவனுக்கும் பிறக்கும் மகவு

தெய்வபக்தி யுடையதாகும்; பெண்ணுயின் நீண்ட வாழ்நாளுடையதாகும்; கோபத்தோடு கூடியதாகும். சித்தினிப் பெண்ணுக்கும் முயல் வகுப்பு ஆடவனுக்கும் பிறக்கும் மகவு ஆணுயின் சாந்தமுடையதாகும்; ஆனால் குறைந்த வாழ்நாளுடையதாகும்; பெண்ணுயின் துன்பமுடையதாகும், கிழவனை மணப்பாள். பதுமினிப் பெண் மான் வகுப்பு ஆடவனுடன் கூடுவதால் பிறக்கும் மகவு ஆணுயின் உடல் பருத்திருக்கும், இன்ப துன்பங்கள் இரண்டிலும் பங்கு கொள்ளும்; பெண்ணுயின் நல்ல செல்வமுடையதாகும், ஆனால் குறைந்த வாழ்நாளுடையதாகும். அத்தினிப் பெண்ணுக்கும் மான் வகுப்பு ஆடவனுக்கும் பிறக்கும் மகவு ஆணுயின் மிருகத்தன்மையுடையதாகும்; பெண்ணுயின் துர்நடத்தையுடையதாகும், கணவனைக் கொல்லும். சங்கினிப் பெண்ணுக்கும் மான் வகுப்பு ஆடவனுக்கும் பிறக்கும் மகவு ஆணுயின் அறநெறியில் நிற்பதாகும். பத்மினிப் பெண்ணுக்கும் எருது வகுப்பு ஆணுக்கும் பிறக்கும் மகவு ஆணுயின் சிறந்த வீரனுவான், ஆயினும் மக்களைத் துன்புறுத்துவான்; பெண்ணுயின் கற்பொழுக்க மில்லாதவளாவாள். சித்தினிப் பெண்ணுக்கும் எருது வகுப்பு ஆடவனுக்கும் பிறக்கும் மகவு ஆணுயின் வாழ்நாட்குறைவுடையதாகும்; பெண்ணுயின் கருவிலேயே இறந்துபடும். பத்மினிப் பெண்ணுக்கும் குதிரை வகுப்பு ஆடவனுக்கும் பிறக்கும் மகவு நபுஞ்சகமாகும்; (அலி) ஆணுயின் எப்பொழுதும் நோயுடையதாகும்; பெண்ணுயின் தூய ஒழுக்கமும் தூய அறிவும் பதிபக்தியும் தெய்வ பக்தியு முடையதாகும். சித்தினிப் பெண்ணுக்கும் குதிரை ஆடவனுக்கும் பிறக்கும் மகவு ஆணுயின் பிறந்த சிலநாளில் இறந்துபடும்; பெண்ணுயின் வெள்ளை மேனியும், ஒற்றைக் கண்ணும் உடையதாகும். சங்கினிப் பெண்ணுக்கும், குதிரை வகுப்பு ஆடவனுக்கும் பிறக்கும் மகவு ஆணுயின் பிறவிக் குருடும், உடல்வன்மைக் குறைவும் உடையதாகும்; பெண்ணுயின் துர்நடத்தையுடையதாகும், கணவனைக் கொல்வாள், அல்லது பிறந்த நாளிலிருந்து ஊமையாகும் என்பதாம். பொருத்தமுடைய கூட்டுறவில் தோன்றும் மக்கள் தத்தம் பெற்ருேர் பண்புகளையும், மாறுபட்ட கூட்டுறவில் தோன்றும் மக்கள் தத்தம் பெற்ருேர்க்கு மாறுபட்ட பண்புகளையும் உடையவராகக் காணப்படுவதை நோக்கின் வாழ்க்கைத்துணைத் தேர்வில் பிறப்பு நோக்குதலின் இன்றியமையாமை புலப்படும்.'' மேற்கூறிய ஆடவர் மகளிர் பகுப்பு, சாதி (வருணம்) பற்றியதாகாதாயினும், உடல்நிலை அறிவுநிலை ஆகிய இரண்டையும் கருவியாகக் கொண்டு பகுக்கப்பட்டன என்பது வெள்ளிடைமலையாகும். “சாதிக்குத் தகுந்த புத்தி குலத்துக்குத் தகுந்த ஆசாரம்''

என்னும் பழமொழியும் இதனை வலியுறுத்தும். We Europeans என்ற நூலில் அதன் ஆசிரியர்களாகிய ஹக்ஸ்லி என்பவரும் ஹாடன் என்பாரும் கூறுவனவும் இதனை வலியுறுத்தும். பிறப்பு குடிகருதாது மணம் புணர்வதால் நாட்டில் சமூக உறவுநிலையும், பொருளாதார நிலையும் மாறி நிலைகுலையும் என்பர் இவ்வாசிரியர்கள். அவர்களது கூற்றினை ஈண்டுத் தருகின்றனன்:

"Crosses between groups or classes of markedly different ethnic types within the same country, when they differ also in standard of living, social status or general outlook will have the effect of blurring the social barriers and economic distinctions between them. In certain cases the ruling caste or class may find itself or its ideas swamped or diluted to vanishing points; in other cases it feels impelled to guard its preveleges. From a purely biological standpoint it might conceivably be a good thing to undertake mass-crossing between say the British and the Bantu, or the Americans and the Chineses on account of the new genetic recombinations to be obtained. But the social systems involved would be unable to stand the strain. Ther is a limit to the amount of a foreign stock, which can be taken up by a nation in a given time. This is not due to the quantity of foreign genesperse, but to the mass of alien habits, prejudices, ideas and resistances which have to be overcome and assimilated......................Racial crossing may be inadvisable, but chiefly because the ethnic groups involved happen to be in different national world or on different cultural levels. Policy in this matter can only be ditermined on its economic and social merits: the biologist and the engenist have here a negligible or at least a minor role to play as advisers. When politicians and propogandists to seek to make out a purely biological case against intermarriage with such and such a people or ethnic type, we can always be sure that this is a rationalization and the real antagonism is to be sought in some other sphere. The biological reasoning is a cloak to fling over obscure, perhaps unconscious feelings. The ethnic group thus discriminated against, serves as the scape goat for some economic fear, some class prejudices some nationalist—ambition some cultured pride even some inferiority complex. Similar types of rationalization, with the same lack of biological validity, have been employed to justify slavery, the caste system, class oppression, religious persecution. The argument against so called miscegenation is only one among many thrown up by groups in power to justify themselves in their own eyes or in the eyes of others."

இதனை உற்றுநோக்கின் பிறப்பு நோக்கவேண்டுவது இன்றியமையாதது என்பது புலனும். தொல்காப்பியர் கூறும் பத்து ஒப்புமைகளும் இன்றியமையாதன என்பது வெளிப்படையன்றோ! ஆதலின் இன்பம் சிறக்க, இல்லறமோங்க, நாடு செழிக்க இவ்வொப்புமை காணும் முறை நாட்டில் நிலவுவதாக.

# இரக்கமொன்று இல்லையாயின்...

[புதுவை, திரு. முதுகண்ணன்]

உலகம் விளங்க ஒளிர்கதிர் பாய்ச்சும்
பலர்புகழ் ஞாயிறு படர்ந்தது மேற்பால்
இயற்கை யென்னும் இணையிலா ஓவியன்
வயங்குறு முகிலின் வண்ணங் கூட்டி
மேலைவான் திரையில் வியப்புறத் தீட்டி
மாலை யென்னுங் காலங் காட்டினன்
மின்பட் டுடையுடன் பொன்னணி விளக்கம்
என்ன ஆர்ப்பாட்டம்! என்ன ஆர்ப்பாட்டம்!
கொடியிடை துவளக் குழைகா தாடத்
தொடிக்கை சிலம்பத் துகில்காற் றசையச்
செய்வழி பாட்டுச் செம்பொருள் நிறைந்த
கைவழி நின்ற கோடிகம் உலாவ
வீங்கும் இருளில் முகமதி விளங்கப்
பாங்கிற் பேசிப் பாவைய ரிருவர்
திரும்பிப் பார்த்துந் திசைமுகம் நிமிர்ந்தும்
முருந்துபோற் பற்கள் முறுவல் சிந்தத்
தேயும் பாட்டையிற் சீறடி வருந்தக்
கோயில் நோக்கிக் குறுநடை யிட்டுச்
சென்றுகொண் டிருக்கிறார்! சென்றுகொண் டிருக்கிறார்!
இன்ன காட்சிக் கெதிரிடை யாகத்
தானலங் கெட்ட தசைநார் உலற
வானவில் போலுங் கூனல் குறுக
நரைத்தலை நடுக்குற நாத்தடு மாற
இருமல் இடையிடை மிடைந்து வருத்தக்
கோலே தன்றுணைக் காலா யூன்றி
எலா நடையினால் என்புடல் தளர
வேற்கண் மாய்ந்த கோற்கண் கிழவி
பீறல் ஆடை மேற்படப் போர்த்தி
இருந்துய ருழந்து வருவோ ளாங்கண்
உறுதுணை கொண்ட ஊன்றுகோ லிழுக்கி
விழுந்தனள்; அம்மவோ! வையகம் விழுந்ததோ?
எழுந்ததோர் சிரிப்பொலி! இயல்பினில் துடித்தெழும்
உள்ளத் துருக்கம் ஒன்றுமே யின்றி
எள்ளிநகைத் தன்றோ எகுகின் றார்கள்!
மக்கட் பண்பின் மாண்பிது தானா?
ஒக்கநின் றியாங்கும் ஒன்றாய்ப் பலவாய்
இயங்கும் இயவுளே! இதுவும்ஓர் இளமையோ?
இயல்பினிற் பிறருறுந் துயரினைக் காண்புழித்
தோன்றும் இரக்கம் தூர்ந்ததெங் கிவர்பால்?
ஆன்றஅன் பினும் அருளெனும் பண்பு
எங்கோ மறைந்தது? எங்கோ மறைந்தது?
இங்கிவர் இரங்கிலார்; தங்குறைக் கிரங்கவோ
உன்பால் வருகிறார் உருக்கத் தோடே!
என்ன அழகிது! என்ன அழகிது!
**இரக்கமொன்று இல்லை யாயின்......**
சுரக்குமோ இன்பம்? தூயநற் பொருளே!

# "பொருட் பெண்டிர்"

[வித்துவான், திரு. கே. குஞ்சிதபாதனர், மயிலம்]

"பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று" (வரைவின் மகளிர். 3)

இக்குறளில், வரைவின் மகளிரது பொய்ம்மை முயக்கத்திற்கு ஓர் உவமை கூறுகிருர் வள்ளுவர். அஃதாவது "இருட்டறையில் ஏதில் பிணந்தழீஇ யற்று" என்பதாகும். இவ்வுவமையின் பொருளைக் குறித்துக் கருத்துப் பிறழ்வுகள் பலவுள. அவைகளுள் கொள்ளத் தகுந்ததெது? தள்ளத் தகுந்தன எவை? என்பதுபற்றி அறுதியிடுவதே எமது குறிக்கோள்.

**1. மணக்குடவர் கருத்து:**

"பொருளே கருதும் பெண்டிர் ஒருவனோடு பொய்யே முயங்கும் முயக்கம் இருட்டறையினுள்ளே கிடந்ததொரு வேற்றுமைப் பிணத்தைக் கூலிக்குத் தழுவியது போலும்," என்பதாகும்.

**2. பரிமேலழகர் கருத்து:**

"கொடுப்பாரை விரும்பாது பொருளையே விரும்பும் பொதுமகளிரது பொய்ம்மையையுடைய முயக்கம், பிணமெடுப்பார் இருட்டறைக் கண்ணே முன்னறியாத பிணத்தைத் தழுவினாற் போலும்," என்பதாகும்.

**3. R. P. சேதுப்பிள்ளை கருத்து:**

"பொருளை விரும்பி ஒருவனைச் சேரும்போது மகளிரது தன்மை, காசுக்காக இருட்டறையில் முன்னறியாத அயற்பிணத்தைத் தழுவும் மக்களது தன்மைபோன்றது," என்பதாகும்.

**4. டாக்டர் மு. வரதராசனர் கருத்து:**

"பொருளையே விரும்பும் பொதுமகளிரின் பொய்யான தழுவுதல் இருட்டறையில் தொடர்பு இல்லாத ஒரு பிணத்தைத் தழுவினாற் போன்றது," என்பதாகும்.

இவைகளில் பரிமேலழகர் உரைப்பொருள் ஓர் சார்பாகவும் ஏனை மூவர்தம் உரைப்பொருள் ஓர் சார்பாகவும் மிளிரக் காணலாம். இவ்விரு சார்பையும் ஆய்வாம்.

பரிமேலழகர் தம் உரைக்குத் தரும் விளக்கமாவது: "பொருட்கு முயங்கும் மகளிர் கருத்தும் செயலும் ஆராயாது

சாதியும் பருவமும் ஒவ்வாதாளை முயங்குங்கால் அவர் குறிப்புக் கூலிக்குப் பிணமெடுப்பார் காணப்படாததோர் இடத்தின்கண் இயைபில்லாததோர் பிணத்தை எடுக்குங்கால் அவர் குறிப்பொடு ஒக்குமெனவே, அகத்தால் அருவரா நின்றும் பொருளுணுக்கிப் புறத்தால் தழுவுவர்," என்பதாகும். தழீஇயற்று என்பதற்குப் பரிமேலழகர் எடுத்தற்பொருட்டுக் கையாலணைத்தல் என்று பொருள் கண்டார் போலும். பிணமெடுப்பார் என்று கூறுவதால் இக் கருத்து வலியுறுகின்றது. இக் கருத்தையே உடன்படும் பிற்கால ஆசிரியர்களுமுளர்.

1. மு. இராகவையங்கார்:

ஏதில் பிணமாவது அநாதைப் பிணமென்றும். அது தேடிக் காணும்படி மூலை முடுக்குகளில் ஆதரவற்றுக் கிடப்பதாகலின் அதற்கு விளக்கு முதலியன அமைத்தல் இயையாதென்றும் இதுபற்றியே இருட்டறை என்பதற்குக் "காணப்படாததோரிடம்" எனப் பரிமேலழகரும் விளக்கங் கூறினர் என்றும்,

"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வா னென்பான் துணை"

என்னும் குறளில் வரும் இறந்தான் என்பானுக்குரிய ஈமக் கடன் செய்தல் இல்வாழ்வானுக்கு உரித்தாகலின் அச் செய்கையில் கூலிக்குப் பிணமெடுத்தல் நிகழ்வதொன்றென்றும் கூறி, பரியுரைப் பொருத்தமுடைத்தென்பர்.

2. அரசஞ் சண்முகனார்:

அரசனால் இருட்டறைச் சிறையிடப்பட்டாருட் சிலர் ஆங்குத்தானே யிறத்தலும், அநாதைகளிற் சிலர் பொது மண்டபங்களிற்றங்கலும் ஆங்கு இருட்டறை இருப்பின் அதன்கண் இறந்து கிடத்தலும், ஆண்டுக் கூலிக்குப் பிணமெடுப்பார் சென்று கையால் அணைத்து எடுத்துக்கொண்டு வருதலும் உண்மையின் பரியுரை திருத்தமான பொருத்தமுடைத்தென்பர்.

மேற்கூறிய பரியுரையும் அதை ஒட்டிக் கூறிய விளக்க உரைகளும் பொருந்தாமை காண்பாம்.

தழீஇயற்று என்பதற்குத் தழுவியது போலும் என்பது பொருள். தழுவுதல் என்றால் உடலோடு உடல் பொருந்தும்படி முயங்குதல் என்பதாகும். இச் செய்தியை.

"பின்னு வீழ்சிறு புறந்தழீஇ
அன்னை முயங்கத் துயிலின் ளாதே"

"புதல்வன் தழீஇயினன் விறலவன்"

என்னும் குறுந்தொகை அடிகளால் நன்குணரலாம். தழீஇ யற்று என்பதற்கு முயங்குவதைப் போலும் என்பதே ஏனை மூவர்தம் உரைவளமாகக் காணப்படுகிறது. யாம் கூறிய உரையே வலிவுடைத் தென்பதை

" தாய்முலை தழுவிய குழவி போலவும் "

என்ற பட்டினப்பாலை அடிக்கு, நச்சர், 'தாயுடைய முலையைத் தழுவிய பிள்ளையைப் போலவும்,' என்று உரைகூறி, இஃது யாற்றுநீர் கடல்நீரொடு ஒன்றுபடுதற்குவமை என்று கூறு வதால் நன்குணரலாம். இவைகளை நோக்கும்போது தழுவுதல் என்பது எடுத்தற்பொருட்டுக் கையாலணைத்தல் அல்ல என்பது தேற்றம். ஏதில் பிணமென்றால் அயன்மைப் பிணம் என்றே போதருமாகலின் அநாதைப் பிணம் என்பது பொருந்தாமை யானும், இல்வாழ்வான் எடுக்கக்கூடிய அநாதைப் பிணமேயா யின் ஆண்டுச் சிறு விளக்கேனும் இட்டுவைப்பானாகலின் இருட் டறை என்பது பொருந்தாமையானும், சிறையின்கண் இறந் தானை அரசியல் வேலையாட்களே ஆவன செய்து அடக்கம் செய்வராகலின் அப்பிணத்தைத் தழுவுதல் என்பது பொருந் தாமையானும் கூலிக்குப் பிணம் எடுத்தல் என்ற வழக்குப் பெரும்பான்மையும் இல்லாமையானும் அது பொருந்தா தென்பது. ஆயின் அமைதியுடைய அருங்கருத்து யாதெனக் காண்பாம்.

மலையாள நாட்டில் நம்பூரி என்ற அந்தணர்களுக்குள் இருந்துவந்த, வருகிற, பெருவழக்கினையே வள்ளுவர் இக் குறளில் உவமையாய் உரைக்கின்றார் என்பது, மாதவையர் கருத்து. (செந்தமிழ். 458-ம் பக்.)

மலையாள நாட்டு வழக்கு வருமாறு:

நம்பூரி வகுப்பு அந்தணர்களின் ஒவ்வொரு குடும்பத்திலும் மூத்த மகன் மட்டுமே விதிப்படி மணம் செய்துகொள்ளுவான். அவன் தம்பிகளெல்லோரும் மணம் செய்துகொள்ளாமலே இருந்துவருவார்கள். இக்காரணத்தால் பெண்கள் பலர் மண மாகாதவர்களாகவே யிருந்து இறந்துபோவதுண்டு. மணமின்றி இறந்த பெண் துறக்கமடையாள் என்பதும், துறக்கமடை வதற்கு மணம் மட்டுமேயன்றிக் கன்னியழிவும் இன்றியமையாத தென்பதும் அந்நாட்டுக் கொள்கைகள். அதனால் வேறு சில அந்தணர்களுக்கு ஏராளமான பொன் கொடுத்து மணமின்றி இறந்த பிணங்களுக்குத் திருமணமும் கன்னியழிவும் மறைமுக மாய் நடத்துவார்கள் என்பது. இக்கருத்தே சாலவும் பொருத்த முடையது.

இக்குறளில் தழீஇயற்று என்னுந் தொடர் உயிர்ப்புடையது. யாம் மேலே கூறிய முயங்குதல் என்ற விளக்கத்தினை இதனுடன் சார்த்தி நோக்க வள்ளுவர் கூறும் உவமம், அங்கை நெல்லியென விளங்காநிற்கும். பொருட் பெண்டிர் முயக்கம் பொய்மையுடையது, என்பதற்குவமை கூறுவார், வேறு ஓர் முயக்கத்தையே கூறினர் என்பது நனி நயப்புடையதொன்று. மேலும் நாயனர் ஈண்டுப் பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கத்தை நவிலுகிறார். யாருக்கு? ஆடவனுக்கு; எதை? வரைவின் மகளிரது வன்னெஞ்சை. அதற்கு அவர் தரும் உவமை, வேறு ஓர் ஆடவன் உள்ளம். அவ்வாடவன் யார்? இருட்டறையில் கிடக்கும் மணமாகாத ஏதில் பிணத்தைக் கன்னியழிவு காரணமாகக் கழஞ்சுகொண்டு கலக்கின்றானே அவன். ஓர் ஆடவனுக்கு மற்றொரு ஆடவன் மனப்பாங்கை உணர்தல் எளிமை. ஆகவே வள்ளுவர், வரைவின் மகளிரை வரையாது ஒழுகும் ஆடவனைப் பார்த்து, உன் பொருளையே விரும்பி உன்னைத் தழுவும் கணிகைக்குப் பொருளையே விரும்பி மணமாகாத பிணத்தைக் கன்னியழிவு செய்வதற்குக் கட்டித் தழுவும் காளையின் வெறுப்புணர்ச்சியே நிற்குமன்றி விருப் புணர்ச்சி நிற்காது. இதை எண்ணிப்பார். உண்மை என்று உறுதியாய்க்கொள் என்று உலகியல் பேசுகிறார், உத்தமர். இவ்வாறு வள்ளுவர் உவமைக்கு வழக்கியல் உரைவிரித்தால்,

“ உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை ”

என்ற உவமை யிலக்கணத்தோடு மாறுபடுமேயெனின் அற்றன்று. உவமைக்கு நிலைக்களன் பேசும் தொல்காப்பியர்,

“ கிழக்கிடு பொருளோ டைந்து மாகும் ”

என்ற நூற்பாவைக் கூறுகிறார். அஃதாவது ஒரு பொருளின் இழிபுகூறுவான் உவமத்தால் இழிபு தோற்றுவித்தலின் அதுவும் நிலைக்களமாம் என்பது. பொருட் பெண்டிர் முயக்கத்தின் இழிபு கூறுவார், கன்னியழிவு காரணமாகப் பிணத்தைத்தழுவும் காளையாகிய உவமத்தால் இழிபு தோற்றுவித்தலின் இஃது இலக்கண வரம்புடையதென்பது. அஃதேல் பொருளன்றி உவமையும் தாழ்த்தப்பட்டனவா லெனின் அங்ஙனமாயினும் பொருளோடு சார்த்திநோக்க உயர்ந்தனவெனப்படுமாகலின் என்க. நீதி கூறவந்த வள்ளுவர், யாண்டோ ஒரு பகுதியில் நடக்கும் வழக்கினை எடுத்து உவமை கூறுவாரா என்று நோக்கினல், கூறுவார்; கூறலாம் என்று படுகிறது. கங்கைக்கரை நாகரிகம் காவிரியாற்றுவரை நீண்டு கன்னித் தமிழ்நாடெங்கும் பரவியதொன்று, கன்னியழிவு செய்யும் வழக்கு, வந்த பகுதியினரிடை வளமுற்று இருக்கலாம். அதைக்கண்ட நாயனர், நவின்றார்

உவமையாக நலம் பயக்கும் குறட்பாவில். அவ்வழக்குப் பரிமே லழகர் காலந்தொட்டு அருகி மலைநாட்டில் ஒரு பகுதியினரிடை உறைந்துவருகிறது என்பதே தேற்றம்.

**இலக்குமணப் போற்றி கருத்து :**

பெண்டுகள் பிணத்தைச் சூழ்ந்திருந்து பிணத்தின்மீது வீழ்ந்து அழுகை இத் தமிழ்நாட்டின் வழக்கமாக ஏற்பட்டிருக் கின்றது. ஆகவே, உற்ருர் அப்பிணத்தின் மீது வீழ்ந்தழுகையில் பிரிவாற்ருமையால் அப்பிணத்தை அருவருப்பின்றி இறுக அணைத்துக்கோடலும் அயலார் அப்பிணத்தின்மீது ஊரொப் பனைக்காக வீழ்ந்தழுகையில் அருவருப்புடன் அப்பிணத்தைத் தழுவுதலும் இயல்பு என்பதாகும். இக்கருத்தும் யாம் மேலே கூறிய இறுக முயங்குதல் என்பதற்கு ஒவ்வாமையானும் அயலார் பிணத்தின்மீது விழுந்து தழுவியழுதல் யாண்டு மின்மையானும் தழுவுதல் இருந்தவழியன்றே அருவருப்புடன் தழுவுதல்வேண் டும். இவ்விரண்டும் இன்மையானும் பெண்டுகள் செயலாகக் கூறுவதில் பெரும்பயன் இன்மையானும் பொருந்தாதென்பது.

---

## வாய்மை

வாய்மை என்னும் சொல், வாயின் தன்மை என்று பொருள் படும். வாயின் தன்மையாவது, உண்டல், தின்றல் முதலிய பருஞ் செயல்களும், பொய்யுரைத்தல், வைதல், வீணுரை பகர்தல், பழித்தல் முதலிய நுண் செய்களும் அன்று. இவைகளினும் சிறந்தது ஒன்று உண்டென உரைக்கின்ருர், வள்ளுவப் பெருந்தகையார். அஃதா வது, பிறர்க்குத் தீங்குதராதவற்றைக் கூறுதல் வாய்க்குரிய செயல், வாயாலடையும் பயன் என்று கட்டுரைக்கின்ருர்.

அப்பொன்னுரை :

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்"

என்பதாகும். எனவே, பிறர் துன்பங்கண்டு அதனைக் களைந்து இன்பஞ் செய்யத் தூண்டும் இன்னுரையே 'வாய்மை' 'உண்மை' 'மெய்ம்மை' எனக் கொள்ளலாம்.

செல்லூர்க்கிழார்.

# மதிப்புரை

**அற்புதக் கனி :**

[**ஆசிரியர் :** திரு. R. பஞ்சநதம் பிள்ளை அவர்கள்; **கிடைக்குமிடம் :** T. G. கோபால் பிள்ளை, தெப்பக்குளம், திருச்சி **விலை ரூ.** 1-8-0]

இந்நூல் இறைவனிடம் இறவாத இன்ப அன்பு வேண்டிநின்ற காரைக்கால் அம்மையாரின் 'அற்புதத் திருவந்தாதி'யின் அரும் பெரும் நுண் கருத்துக்களை விளக்கத்துடன் காலத்துக்கேற்றவாறு எழுதியதாகும். ஆசிரியரின் இப் புதுமுறை பாராட்டும் பண்புடையது. சமய அறிவு அருகி உலகாயதம் விரவிவரும் இக்காலத்து இந்நூல் போன்ற பன்னூல்கள் வெளிவருவது மொழிக்கும் சமயத்துக்கும் அதன் வாயிலாக நாட்டுக்கும் நலம் பல பயப்பதாகும்.

தூய செந்தமிழ்ப் பாக்களானியன்று பேரன்பு நெறியைப் புகட்டி இறை அருட்கு வழிகாட்டும் இத்தகைய நூல்கள் வெளிவந்து நாட்டைப் பண்படுத்துவதாக. அடுத்த பதிப்பிலேனும் இதன்கண் விரவிவந்துள்ள வட சொற்கள் களையப்பெறின் நலமாகும்.

**பிற்காலச் சோழர் சரித்திரம் பகுதி II**

[**ஆசிரியர் :** திரு. டி. வி. சதாசிவபண்டாரத்தாரவர்கள்; **கிடைக்குமிடம் :** அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்.]

நம் செந்தமிழ் மொழியையும் நாட்டையும் சீருறச் செய்தோர் நம் சேர சோழ பாண்டியரென்னும் முடியுடை வேந்தர் மூவர்களாவர். இவர்களின் வரலாற்றை ஒவ்வொரு தமிழ் மகனும் கற்றறிய வேண்டுவது முதன்மையாகும். அம்முறையில் இந்நூல் சோழர் வரலாற்றை விரித்துக் கூறும் சிறப்புடை நூலாகும். இதன்கண் முதற் குலோத்துங்க சோழன் முதல், மூன்றும் இராசேந்திர சோழன் இறுதியாகவுள்ள சோழ மன்னர் எண்மர் வரலாற்றை நம் பழந்தமிழ் நூல்கள், கல்வெட்டு முதலியவற்றின் சான்றுகளுடன் விளக்கிக்காட்டியுள்ளனர். இடையிடையே வரலாற்றைக் காட்டும் ஓவியப் படங்களுடன் இந்நூல் நல்லமைப்பில் மிளிர்கின்றது. பழங்கால அரசர்களின் வரலாறு காண விழைவார்க்கும், கற்றுத்துறை போகும் மாணவர்க்கும் இன்றியமையாத நூலெனின் அது மிகையாகாது.

இத்தகைய நூல்போன்ற நன்னூல்கள் பல இன்னும் ஆக்கித்தந்து ஆசிரியரவர்கள் பன்னெடுங்காலம் வாழ்வார்களாக.

**வள்ளலார் வகுத்த வழிகள் :**

[**குறிப்புரை ஆசிரியர் :** வித்துவான், பாலூர், கண்ணப்ப முதலியார் அவர்கள்; **கிடைக்குமிடம் :** வி. குமாரசாமி நாயுடு அன்டு சன்ஸ் 34, சின்னத்தம்பி தெரு, சென்னை; **விலை அணா** 8.]

'சைவ சமயமே சமயம்' என்னும் மொழியை உண்மைப் படுத்திக் காட்டியவர்கள் அண்மையில் வாழ்ந்த இராமலிங்க அடிகளாவார்கள். அவர்கள் தம் அனுபவ முறையிற்கண்ட உண்மைகளை உலக மக்கள் உய்யும் வண்ணம் உரைநடை வாயிலாக விளக்கிக் காட்டியுள்ளார்கள். அவ்வுரையை 'வள்ளலார் வகுத்த வழிகள்' என்னும் பெயருடன் சென்னை வி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸினர் வெளியிட்டுள்ளனர்.

இதன்கண் விரவிவந்துள்ள அருஞ் சொற்களுக்கு வித்துவான் திரு. பாலூர், கண்ணப்ப முதலியாரவர்கள் குறிப்புரையெழுதியுள்ளார்கள். நன்முறையில் இந்நூல் கையடக்க அளவில் அமைந்துள்ளது. தமிழ் அன்பர்கள் யாவரும் வாங்கிப் பயின்று பயன் பெறும் நூல். இத்தகைய நூல்களை வெளியிட்டுவரும் ஷ பதிப்பாளரைப் பாராட்டுகின்றோம்.

# செய்திகளும் குறிப்புகளும்

## தூத்துக்குடி சைவசித்தாந்த சபை

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 68-ஆம் ஆண்டு நிறைவு விழா வரும் வைகாசித்திங்கள் கக, கஉ (24, 25, 5-52)ஆம் நாட்களில் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் சின்னப்பண்டார சன்னிதி மறைத் திரு. தெய்வசிகாமணி அருணாசலதேசிக சுவாமிகளவர்கள் தலைமையில் நிகழும்.

அது காலை தேவகோட்டைத் தமிழ்வள்ளல் திருவாளர், சேவு. மெய்யப்ப செட்டியாரவர்கள் விழாப் பேரவையைத் துவங்கி வைப்பார்கள். பல பேரறிஞர்கள் சொற்பொழிவு நிகழ்த்த இசைந்துள்ளார்கள். சபையைச் சார்ந்த பாகம் பிரியாள் மாதர் கழக 24-வது ஆண்டு நிறைவு விழாவும் 26—5—52-ல் அண்ணாமலை நகர் திருவாட்டி பு. ர. சா. இராசேசுவரி அம்மையாரவர்கள் தலைமையில் நிகழும். நிகழ்ச்சி நிரல் சபை அமைச்சரிடம் பெறலாம்.

## வாலாசாபாத்து இந்துமத பாடசாலை

ஒரு நாட்டின் செல்வம் அறிவு. அவ் அறிவுக் கலையை வளர்க்கும் தனிநிலையம் வாலாசாபாத்து இந்துமத பாடசாலையாகும். அதன் தோற்ற நிறைவுற்ற ௩௬-ஆம் ஆண்டுத் திருநாள் 27—4—52-ல் சிறப்புற நிகழ்ந்தது. அவ்விழாவிற்கு, திருவாளர் இராவ்சாகிபு, டி. கே. சங்கர வடிவேலு பிள்ளை ஐ. ஏ. எஸ். அவர்கள் தலைமை ஏற்று விழாவைச் சிறப்பித்தார்கள்; திருவாளர் டி. பாலசுந்தரம் பி. ஏ. அவர்கள் பரிசு வழங்கினார்கள்; திருவாளர் எஸ். பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் கால்கோள் விழா ஆற்றுவித்தார்கள். அவர்களின் நிழலுருவங்கள் இதில் முன்பக்கத்தில் இணைத்துள்ள படத்தில் முறையே நடுவிலும், இட, வலப் பக்கங்களிலும் காணப்படுகின்றன.

இதனைக் கண்ணெனப் போற்றிப் புரந்துவரும் தலைவர் திரு. மாசிலாமணி முதலியாரவர்கள் இப்பாடசாலையை மேலும் நன்னிலை யுய்த்துப் பன்னெடுநாள் வாழியர்; இப்பாடசாலை திசையனைத்தும் வென்றேறிச் சிறப்பதாக. இது போன்ற கலைக்கூடங்கள் நாட்டில் பலதோன்றி கல்வி அறிவுச் செல்வத்தை யாண்டும் பரப்புவதாக.

## ஈரோடு திருக்குறள், திருமுறை ஆராய்ச்சிக்கழகம்

இறைவன் (எங்குந் தங்குவோன்) என்று ஆண்டவனைக் கண்ட நம் நாட்டில், உலகாயதம் தலை விரித்தாடுகின்றது. அதனைத் தடுக்க திருக்குறள், திருமுறைக் கழக ஆராய்ச்சிக் கழகத்தார் ஒவ்வொரு திங்களும் ஞாயிற்றுக் கிழமை தோறும் ஊர் ஊராய்ச் சென்று கடவுள் வழிபாட்டின் உண்மையைப் பரப்பிவருகின்றனர். இதற்குத் தலைமை திரு. எஸ் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பி.ஏ., எல்.டி., அவர்களாவர். இச் செயல் நாட்டு நலத்துக்கு அரண் செய்யுமென்பதறிந்து மகிழ்கின்றோம்.

## டாக்டர் திருவாட்டி மரியா மாண்டிசோரி அம்மையார் பிரிவு

குழந்தைகட்கு நன்முறையில் கல்வித் திட்டத்தை உருவாக்கி உலகிடைப் பரப்பிய டாக்டர் மரியா மாண்டிசோரி அம்மையார் அவர்கள் தம் 81-ஆம் அகவையில் திடுமென மறைவுற்ற செய்தியறிந்து வருந்துகின்றோம்.

இவர் இதாலியில் சியாரவில் என்ற இடத்தில் 1870-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் கங-ஆம் நாள் பிறந்தார். இதாலியில் பெண்களில் முதலாவதாக மருத்துவப் படிப்புக்கு முன் வந்தவர் இவரே. ரோம் பல்கலைக் கழகத்தில் முதல் முதல் டாக்டர் பட்டம் பெற்ற பெண்மணியும் இவர்தான்.

மருத்துவத் துறையில் பெயரும் புகழும் பெற்ற அம்மையார் பெண்கள் நலனுக்கு அக்கறைகொண்டு அரசியலில் புகுந்தார்.

1906-ஆம் ஆண்டில் குழந்தைகளின் கல்வித் திட்டத்தில் தம் மனத்தை ஈடுபடுத்தித் தம்முடைய விஞ்ஞான, சமூக அறிவுத் திறமை யாவற்றையும் ஒருமுகப்படுத்தி மாண்டிசோரி கல்வி முறையை உருவாக்கினர்.

தம்முடைய கல்வித்திட்டம் முதன்மையானது என்பதை நிலைநாட்ட 1913-ஆம் ஆண்டில், உலக ஆசிரியப் பெருமக்கள் மாநாடு ஒன்றை நடத்தி, அதில் தம்முடைய கல்வித்திட்டத்தை ஐரோப்பா, முதலிய பன்ஞடுகளிலிருந்து வந்திருந்த ஆசிரியர்களுக்கு விளக்கமாகப் பயிற்சி அளித்தார்.

முதலாம் உலகப்போர் நிகழ்ந்தபோது பெனிடோ முசோலினியால் நாட்டைவிட்டுத் துரத்தப்பெற்று அமெரிக்கா சென்று அங்கே மாண்டிசோரி கல்வித்திட்டப் பயிற்சி நிலையம் ஒன்றை நிறுவினர்.

1939-ஆம் ஆண்டு முதல் சென்னை அடையாறு பிரமஞான சபையில் தொடர்புகொண்டு பன்முறை வந்து அவ்வவையில் தங்கியுள்ளார். இரண்டாவது உலகப்போர் நிகழ்ந்தபோது சென்னை அடையாற்றில் தங்கி, மக்களுக்குப் பல துறைகளில் தொண்டாற்றினர்.

மாண்டிசோரி கல்விமுறை குழந்தைகளின் தனிக் குணச்சிறப்பை மேலும் மேலும் வளர்த்துக் குழந்தைகள் தம்மைத்தாமே பேணிக்கொள்ளும் திறப்பாட்டை அளிக்கிறது. இதனல் சிறுர்களின் உடல் வளர்ச்சியும், உள்ள ஒளியும் ஒருங்கே நன்கு அமைகின்றன.

இத்தகைய மாண்புமிக்க அம்மையார் நூர்ட்விக் (ஃகாலந்து) நாட்டில் 1952, மே, 6-ஆம் நாள் இரவு நேரத்தில் தம் நண்பர்களுடன் தங்கியிருந்தபோது செங்கீர்க் குழாய்கள் வெடித்து இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**கி. பாகிஸ்தானில் பெருஞ் சுழல்காற்று**

இங்குள்ள பரீத்பூர் சில்லாவில் சென்ற சனிக்கிழமையன்று சுழல் காற்று மிக்கு அடித்ததால் இருவர் இறந்தனர்; நூறு பேருக்குமேல் காயமுற்றனர்; பல கால் நடைகளுக்குக் கெடுதல் ஏற்பட்டது; மரங்கள் பல வேருடன் சாய்ந்தன; பயிர்களுக்கும் சேதம் உண்டாயிற்று; ஏறக்குறைய 3500 வீடுகளுக்குச் சேதம் ஏற்பட்டது. உடனே சில்லா 'மாஜிஸ்ட்ரேட்' சென்று மருத்துவ உதவியளித்துச் சில இடங்கட்கு உணவு தானியம் கொடுத்ததாகச் செய்தி வெளிவந்துள்ளது.

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே, அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.

ஓம் சி

# தென்னிந்திய சைவசித்தாந்

## நெல்லைச் சித்

(27—4—'52 முதல் 2



**இருப்பவர் :** நல்லம்மாள், லெ. சண்முகத்தம்மாள், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, பு.
K. A. சிவஞானம் பிள்ளை, ப. இராமநாத பிள்ளை, தூ. சு. கந்தசாமி முதலி
பிள்ளை, ராம. ப. செந்திலாறுமுகம் பிள்ளை, தி. மு. வள்ளிநாயகம் பிள்ளை,

**நிற்பவர் :** I. அ. க. நவநீதகிருட்டிண பிள்ளை, பாடகலிங்கம் பிள்ளை, அரி. ஆ. நடராச
ஆ. முருகேசன், வை. மு. சண்முக தேசிகர், பா. மகாலிங்க தேசிகர்,
வே. சங்கரநாராயணன், ந. சேதுரகுநாதன், ப. க. சுந்தரமூர்த்தி.

II. இரா. கதிர்வேல் முருகன், ச. பரமசிவம், மு. சுந்தரவிநாயகம், அ. ஆ. சு
சி. இராமசாமி ஐயா, வீர சிவசுப்பிரமணிய பிள்ளை, மீனாட்சிசுந்தர
மரு. சிவகுருநாதன்.


III. க. சிவசம்பு, ம. சிவசம்பு, டி. கே. கணபதி, திருவடியா பிள்ளை, வ.
அ. தீத்தாரப்ப முதலியார், கா. கணபதியா பிள்ளை, கா. மாயாண்டி
கொ. பி. மகாலிங்கம் பிள்ளை.

வம்

# த சங்கம், திருநெல்வேலி.

## ாந்த வகுப்பு

0—5—1952 (முடிய)



சி. புன்னைவனநாத முதலியார், தி. துரைசாமிப் பிள்ளை, மு. சுப்பிரமணியன் செட்டியார்,
யார் (ஆசிரியர்), வ. சுப்பையா பிள்ளை, சி. ச. அருணாசலம் பிள்ளை, ச. முத்துக்குமாரசாமி
வ. பொன்னம்மாள், ந. பாலம்மாள்.

ன், சுந்தரகுமரன், க. வெள்ளைச்சாமி, மீ. கந்தசாமிப் புலவர், சா. கூர்மாவதாரக்கோன்,
பொன். சுப்பிரமணிய பிள்ளை, ஆதிமுருகவேள், சொ. கு. மதுரைநாயகம் பிள்ளை,

ப்பிரமணிய பிள்ளை, கு. சங்கரன், பொன்னம்பலம், ச. நடராச பிள்ளை, பே. சுந்தரம்,
தேசிகர், அ. திருமலை முத்துசாமி, மு. கோவிந்தராசன், முத்தணைந்தபெருமாள்,

காந்திமதிநாதன், கு. பரமசிவன், சொ. சிதம்பரநாதன், அ. இ. முத்துக்குமாரசாமி,
பாரதி, க. சேதுராமலிங்கம், கோ. முருகையா, இராம. கனகசபாபதி பிள்ளை,